பக்கங்கள் 12 விலை ரூபா 4-00

வற்றுப்பளை கண்ணகி அம்மன் பொங்கல்

ரூ. 20/-க்கு மில்க்வைற் உற்பத்தி வாங்குவோருக்கு கீரைவிதை, அழகிய அம்பாள் ஸ்ரிக்கர் அன்பளிப்பு.
மற்றும் மேலுறைகளுக்கு உரிய பரிசுகள்.

மில்க்வைற்

யாழ்ப்பாணம்.

(சி 789)


ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர்: 32 வைகாசி 27 துல்ஹஜ்ஜா பிறை 16 இதழ் 11 8

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 10-06-1990

தகிக்கும் வெய்யிலில் இருந்து பாதுகாப்பு



மில்க்வைற் 200 மேலுறை அனுப்பித் தொப்பியொன்றை பெற்றுப் பயனடைக.
மில்க்வைற்,
யாழ்ப்பாணம்.

(சி-793)

# பாதுகாப்பு செலவினம் குறைக்கப்படாது; வெளிநாடுகளிலிருந்து ஆயுதம் இறக்குமதி!

(கொழும்பு)

நாட்டில் உருவாக்கக்கூடிய எந்த சந்தர்ப்ப சூழ்நிலையையும் எதிர்நோக்க வேண்டிய அவசியம் கருதி பாதுகாப்புச் செலவினங்களை மட்டுப்படுத்தும் எண்ணம் அரசுக்கு தற்போதைக்கு இல்லை என்று சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் பாதுகாப்பு செலவினத்துக்கு என 10 பில்லியன் ரூபா ஒதுக்கப்படவுள்ளதாகவும், ஏற்கனவே சீனா, இங்கிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து ஆயுதங்களும், வெடி மருந்துகளும், கொள்வனவு செய்வதற்கு அமைச்சு அங்கீகாரம் அளித்துள்ளதாகவும் தெரிகிறது.

1,70, 200 யு. எஸ். டொலர் பெறுமதியான 20, 000 ரி-56 தன்னியக்க துப்பாக்கிகள் சீனாவிலிருந்தும் 72 லட்சம் ரூபா பெறுமதியான

(12-ம் பக்கம் பார்க்க)

## 'தமிழ் தேசிய சுயநிர்ணய பிரகடனம் மாநாடு'

# நெடுமாறனும் கட்சியினரும் கைது

# மாநாட்டுக்கும் தடை விதிப்பு!

## அமைதிப்படை விவகாரமே காரணம்

(சென்னை)

**"தமிழ் தேசிய சுயநிர்ணய பிரகடன மாநாடு" நடாத்த முயன்ற தமிழ் நாடு தமிழ்தேசிய இயக்கத் தலைவர் திரு. ப. நெடுமாறன் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் நேற்று தஞ்சாவூரில் வைத்து பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.**

**இலங்கையில் இந்தியப்படையினர் தமிழர்கள் மீது மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கை குறித்து பல ஆதாரங்கள் வெளியிடப்படவிருந்ததையடுத்தே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.**

இம்மாநாடு நேற்றும் இன்றும் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே செய்யப்பட்டிருந்ததுடன் தமிழக அரசும் இம்மாநாடு நடத்த அனுமதியும் வழங்கி இறுதி நேரத்தில் மாநாடு நடாத்த தடை விதித்தது.

எனினும் இத்தடையையும் மீறி திரு. ப. நெடுமாறனும், நூற்றுக்கணக்கான கட்சி உறுப்பினர்களும் தஞ்சாவூர் மணிக்கூண்டிற்கு அருகே கோஷமிட்டவாறு ஊர்வலமாகச் சென்றுகொண்டிருக்கை

(12-ம் பக்கம் பார்க)

## புலிகள் - படையினர் வவுனியாவில் சந்திப்பு

(கொழும்பு)

பாதுகாப்புநிலை தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கும் இலங்கைப் படை அதிகாரிகளுக்குமிடையில் நேற்று முன்தினம் காலை வவுனியாவில் முக்கியசந்திப்பொன்று நிகழ்ந்துள்ளது.

இச்சந்திப்பின் விபரங்கள் வெளியிடப்படாத போதும் அண்மையில் வவுனியாவில் இடம்பெற்ற சம்பவம் பற்றி

(12ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் போராட்டத்துக்கு வடமத்திய முதல்வர் ஆதரவு

(கொழும்பு)

மாகாண சபைகளுக்கு மேலதிக அதிகாரங்கள் வழங்க வேண்டும் என்ற விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராட்டத்துக்கு தனது முழுமையான ஆதரவு என்றும் உண்டு என வடமத்திய மாகாண சபையின் முதலமைச்சர் திரு. ஜி. டி. மகிந்தசோமா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும், தெரிவித்துள்ளதாவது:-

இந்தப் பிரச்னையில் நான் விடுதலைப்புலிகளுடன் இரண்டறக் கலந்து நிற்கின்றேன்.

(12-ம் பக்கம் பார்க்க)

## ★ உலக உதைபந்தாட்டம் போட்டி முடிவுகள்

(ரோம்)

14வது உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்ட முடிவுகள் வருமாறு;

'பி' பிரிவு; சோவியத் எதிர் ருமேனியா போட்டியில் ருமேனியா 2-0 கோல்களால் வெற்றி பெற்றது.

[12ம் பக்கம் பார்க்க]

## 16 இலங்கையர் நாடு கடத்தப்பட்டனர்

(கொழும்பு)

யூகோஸ்லாவியாவில் இருந்து நாடு கடத்தப்பட்ட 16 இலங்கையர்கள் நேற்று முன்தினம் கொழும்பு வந்து சேர்ந்துள்ளனர்.

இவர்களது பயணம் சம்பந்தமாகப் பல லட்சக்கணக்கான ரூபா மோசடி நிகழ்ந்துள்ளமை குறித்து கட்டுநாயக்கா விமான நிலைய சுங்க

(12ம் பக்கம் பார்க்க)

## மீண்டும் கலவரம் ஏற்படுத்த சில தீயசக்திகள் முயற்சி! - ஜனாதிபதி பிரேமா

(கொழும்பு)

"தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையில் சமாதானம் நிலவுவதற்கு நாம் எடுத்துவரும் முயற்சிகள் தோல்வியடைந்து மீண்டும் கலவரங்கள் ஏற்பட்டு நாடு சின்னாபின்னப்படவேண்டும் என்று சில தீய சக்திகள் தூமிட்டு வருகின்றன" என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்தார்.

பொலநறுவையில் நேற்று இடம்பெற்ற பொதுவைபவம் ஒன்றில் பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்,

(12-ம் பக்கம் பார்க்க)

## வடபகுதிக் கடலில் அத்துமீறும் படகுகள்

(கொழும்பு)

வடபகுதி கடற்பகுதியில் தினமும் இருநூறுக்கும் மேற்பட்ட இந்திய கடற்றொழில் படகுகள் அத்துமீறி மீன்பிடிப்பதாகவும் இவர்கள் பலவந்தமாக கடற்படையினரால் வெளியேற்றப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இவை தொடர்பாகவும் அண்மைக் காலத்தில் மீனவர் கைது செய்யப்பட்டதும் குறித்து இந்திய-இலங்கை அரசுகளிடையே பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளது.

இதன்போது அண்மைக் காலச்சம்பவம் தொடர்பாக இந்தியா தனது ஆட்சேபனையை இலங்கையிடம் தெரிவிக்கும் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

(சி)

## யாழ். வந்த படையினர் மதவாச்சியில் நிறுத்தம்!

(வவனியா)

யாழ்ப்பாணம்நோக்கி புகையிரதத்தில் பயணம் செய்த பெருந்தொகையான இராணுவத்தினர் பாதுகாப்பு நலன் கருதி மதவாச்சியில் இறக்கப்பட்டு அங்குள்ள இராணுவ முகாமுக்கு தற்காலிகமாக கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

வவனியாவில் இராணுவத்தினருக்கும். விடுதலைப் புலிகளுக்குமிடையே நிகழ்ந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து அசம்பாவித சம்பவம் எதுவும் நிகழ்ந்துவிடக்கூடாது என்ற முன்

(12ம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.ஆர்.எல்.எவ். எதிர்க்கும்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண சபையை கலைக்க இலங்கை

(12-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

தந்தை Rich Backக்கும், தாய் அல்சேஷன் நாய்க்கும் பிறந்த புதிய இன தடுப்பூசி போடப்பட்ட 1½ மாதக்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு; இ. மகாதேவா 140, செல்லர் வீதி, கல்வியங்காடு. (சி-3939)

## ஸ்கூட்டர் விற்பனைக்கு

பஜாஜ் 82 ஸ்ரீ 5031 உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி P. நாகநாதன், கொலிஜ் லேன், வட்டுக்கோட்டை. (சி-3958)

## வெளிவந்துவிட்டது

விரைவாகக் கணிப்பது எப்படி? How to Calculate Qurickly by Nagaratnam B. S. C. (Cey) நாட்டின் சகல புத்தகசாலையிலும் பெற்றுக் கொள்ளலாம். குறிப்பு: பாலர் முதல் பட்டதாரிகள் வரை அனைவருக்கும் பயன் தரும் அற்புத படைப்பு! எந்தத்துறையிலும் ஈடுபட்டுள்ளவருக்கும் இலகுவாக கணிப்பீடு செய்ய உதவும் நூல். (ஏ. 723]

## இறைச்சி கோழிகள்

சகல வகை இறைச்சிகோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தாமதமின்றி பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் பாம் சென்டர், 19 முருகேசர் ஒழுங்கை. முத்திரைசந்தையடி, நல்லூர். (சி 3961)

## கல்வி

A/L Accountancy ''கம்பனிக் கணக்குகள் ஆசிரியர் க. தங்கராசாB. sc,P.F.T.S.P Dip in ED கிடைக்குமிடம்:- யாழ் நகர புத்தக சாலைகள். தொகையாக வாங்குவோர்க்கு விஷேட கழிவு உண்டு. [சி-3934)

## வீடு வளவு விற்பனைக்கு

மானிப்பாய் முதலியார் கனகசபை வீதியில் செல்ல முத்து விளையாட்டு மைதானத்திற்கு அண்மையில் நல்ல சுற்றுடலில் நல்ல தண்ணீர் கிணற்றுடனும், நல்ல நிலையிலுள்ள பிரயோசனங்களுடனும் 8 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: G. தம்பிராஜா, ஐந்தாம் ஒழுங்கை, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம். (சி 3963)

## நாவல்கள்

மீரா வெளியீடுகள், பிறந்த நாள் பரிசாக வழங்குவதற்கு ஏற்ற நூல்கள். பெரியவர்களுக்கு, ''பூஜைக்காக வாழும் பூவை'' குடும்பத்தில் தோன்றும் அனைத்துப் புயலுக்கும் அசையாது நிற்கும் பெண் ஒருத்தியின் கதை, சிறுவர்களுக்கு ''இராவணன் கோட்டை'' சிறுவர் நவீனம். சகல புத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றன. (சி. 3969)

## தேவை

வளர்ச்சியடைந்த கோழிகள் இறைச்சிக்குத் தேவை. கிலோ ரூபா 60/- ஹோட்டல் பரடைஸ், 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி3952)

## சாரதி தேவை.

ELF350ஓடக்கூடியபதினைந்து வருடத்திற்கு மேல் அனுபவமுள்ள (லைசென்ஸ் உள்ள) சாரதி தேவை. இவர் 45 வயதிற்குமேற்பட்டவரும் மதுபோதை வஸ்து பாவிக்காத நற்குணமுடவராய் இருத்தல் வேண்டும். மேற்கண்ட தகுதியுடையோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு நேரில் வரவும். எக்ஸ்போ பேணிச்சர், சிவன் கோவில் சந்தி, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (சி3966)

## தேவை

புத்தகம், சஞ்சிகை, வெளியிடும் நிறுவனத்தில் பணிபுரிவதற்கு G. C. E. O/L மேல் படித்த எழுத்துத்துறையில் ஆர்வமுள்ள பெண்கள் தேவை. சகல விபரங்களுடனும் விண்ணபிக்கவும். விளம்பர இல. 3942, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [சி3942]

## ஆண்டு 4 (பரீட்சை)

பலரின் வேண்டுகோளுக்கிணங்க ஆண்டு 4ற்கு (அரையாண்டுப் பாடத்திட்டத்திற்குள்) 10-6-90 ஞாயிறு மு. ப. 10-30 பி. ப. 1-00 மணி நேரங்களில் நடைபெறும். பதிவுசெய்யவும், ஆண்டு 4ற்கு தமிழ் / கணிதம் / ஆங்கிலம் ஆகிய பாடங்கள் சிறந்த முறையில் கற்பிக்கப்படுகின்றன. புதிய கல்விநிலையம், கெங்காதரன் ஆஸ்பத்திரி முன்பாக, வண்ணார்பண்ணை, யாழப்பாணம். (சி-3959)

## தவறிவிட்டது

EY 8752 இலக்க வாகனத்தின் பதிவுப் புத்தகம் (Registration Book) 5-6-90ல் சிவன் பண்ணை வீதியில் தவறிவிட்டது. கண்டெடுப்பவர் அ. ஆனந்தராசா. 1ம் வட்டாரம், அல்லைப்பிட்டி என்ற விலாசத்திலோ அல்லது ஈழநாடு காரியாலயத்திலோ ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி-3962)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

நவாலி வடக்கு இளைஞர் சனசமூகநிலையநிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: ப. செகராஜசேகரன், உபதலைவர்; க.கிரிதரன், செயலாளர்; செ. ரமேஸ், உபசெயலாளர்: ம. நிர்மலேஸ்வரன், பொருளாளர்: பி. சுரேந்திரகுமார், போஷகர்கள் சு. குலசேகரம், செ. வரதராசா.

# வலிகாமம்மேற்கில் சட்டவிரோத மின்பாவனை குறைந்துவருகிறது

(சித்தன்கேணி)

வலிகாமம் மேற்குப் பிரிவில் சட்டவிரோத மின் பாவனை வெகுவாகக் குறைந்துள்ளது.

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் கீழ் உள்ள உப அலுவலகங்களுள் கடமையாற்றும் அதிகாரிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளினால் வலிகாமம் மேற்குபிரிவில் உள்ள கிராமங்களில் கடந்த பல வருடங்களாக இருந்து வந்த சட்டவிரோத மின் பாவனை வெகுவாகக் குறைந்துள்ளது.

சுழிபுரம் பகுதியில் திடீர் பரிசோதனையை மேற்கொண்ட அதிகாரிகள் பெரும் தொகையான மின்வயர்களை கைப்பற்றிச் சென்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (137)

## விளையாட்டுப் போட்டி

(மன்னார்)

நானாட்டான் கொத்தணி பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டிகள் பாடசாலை அதிபர் அலெக்ஸ் குரூஸ் தலைமையில் இடம்பெற்றது.

பிரதம அதிதியாக, மன்னார் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் சா. ஏ. ரகீம் கலந்து கொண்டார். பல பாடசாலைகள் இப்போட்டியில் பங்கெடுத்தன. (85)

## தேவை

எமது ஸ்தாபனத்தின் வாகனத்தில் சென்று சாமான் ஏற்றி இறக்கி விநியோகம் செய்வதற்கு ஆட்கள் தேவை.

வயதெல்லை 18—35 வரை.

விரும்பியோர் 13-06-90 காலை 9-00 மணிக்கும் 10-00 மணிக்குமிடையில் நேரில் வருக.

**ஞானம்ஸ் றேட்ஸ்**

**மலிபன் பிஸ்கற் விநியோகத்தர்கள்,**

150, ஸ்ரான்லி வீதி.

யாழ்ப்பாணம்.

09-06-90.

(சி-3972)

## உடனடிப் பிரயாணம்

சவுதிக்கு 5 நாட்களில் பிரயாணம் செய்ய வேலையாட்கள் தேவை

- ★ வீட்டு றைவேர்ஸ் — 6000/-
- ★ வீட்டுப் பெயிண்டர் — 6000/-
- ★ வீட்டு தோட்டக்காரர் — 5000/- (GARDENERS)
- ★ கொம்பனி லேபறஸ் — 4000/-

மற்றும் கிறீக் (GREEK) கப்பலில் வேலை செய்ய விரும்புவோரும் பாஸ்போட்டுடன் நேரடியாக உடன் வரவும்

உணவு தங்குமிட வசதி இலவசம்

**MARAGATHAM TRAVELS**

**B.N.F.Travels & Tours,**
F/58, People Park,
Gaswork St.,
COLOMBO - 11.
Regd. No: 218764.
T'phone: 435906.

**'LAKSHMI',**
65 A, 4-th Cross St.,
JAFFNA.

(சி-3970)

# யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

**பிரதான வீதியில் உள்ள தண்ணீர் தாங்கிக்கு திருத்தவேலைகளும் வர்ணம் பூசுதலும்**

**குருநகர் தண்ணீர்த் தாங்கிக்கு வர்ணம் பூசுதலுக்கான**

## கேள்வி அறிவித்தல்

பின்வரும் தண்ணீர் தாங்கிகளுக்கான திருத்த வேலைகளுக்கும் வர்ணம் பூசுதலுக்குமான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற ஆணையாளரால் 1990-ம் ஆண்டு ஆனி மாதம் 27ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

### அட்டவணை

| (1) வேலை விபரம் | (2) கேள்விப் பிணைப்பணம் மீளளிக்கப்படக் கூடியது | (3) கேள்விப்படிவக் கட்டணம் மீளளிக்கப்பட முடியாதது | (4) ஒப்பந்த பதிவுத் தொகை | (5) வேலை பூர்த்தி ஆவதற்கு வழங்கப்படும் காலம் |
|---|---|---|---|---|
| 1. குருநகர் தண்ணீர் தாங்கிக்கு வர்ணம் பூசுதல் | 500/- | 100/- | 50,000 | 2 மாதங்கள் |
| 2. பிரதான தண்ணீர் தாங்கிக்கு திருத்த வேலைகளும் வர்ணம் பூசுதலும் | 500/- | 150/- | 150,000 | 4 மாதங்கள் |

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற நீர்வேலைப் பொறியியலாளரிடமிருந்து 1990-ம் ஆண்டு ஆனி மாதம் 25ம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12-00 மணிவரை மேலேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு கேள்விக்கு எதிராகவுள்ள கேள்விப் பிணைப்பணம், கேள்வி படிவக் கட்டணம் ஆகியவற்றைச் செலுத்துவதன்பேரில் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களின் இணைப் பிரதிகளில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற நீர்வேலைப் பொறியியலாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வி. பி. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(சி-798)

## அந்தியேட்டி

பிறப்பு 19 - 11 - 1907



இறப்பு 10 - 05 - 1990

**இராசம்மா சபாபதி**

[illegible] (நவாலியூர்)

அந்தியேட்டி 10-06-1990 (இன்று) நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வந்து கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

மகன்: வன்னியசிங்கம் (E. A. P. Group Ltd.)
மருமகள்: வ. மங்கையர்க்கரசி
பேரன்: முரளி U. S. A.
பேரன்: ராஜேஸ் U. K.
பேத்தி: சர்மிளா (Girls School)

(சி-3971)

ஈழநாடு வாரமலர்
EELANADU VARA MALAR

நமது பார்வையில்...

## ஆமைகளை விடலாமா?

"ஆமையும் அமீனும் புகுந்த வீடு உருப்படாது?' — இது தமிழகத்துப் பழமொழி,

கடனை வசூலிக்கவரும் அதிகாரம் உள்ளவன் அமீன்.

எந்த ஆமை வீட்டுக்குள் வரக்கூடாது? சருகாமையா அல்லது நீரில் வாழும் ஆமையா?

இது பற்றிச் சுவையாக விளக்கம் தந்தவர் முத்தமிழ்க்காவலர் கீ. ஆ. பெ.

வள்ளுவரின் குறளிலே பல ஆமைகள் வருவதை அவர் சுட்டிக் காட்டியிருக்கிறார் ... !

அவை எவை? அழுக்காறுமை, வெஃகாமை, பொய்யாமை, கள்ளாமை ... இப்படிப்பலப்பல.

இவை வீட்டுக்குள் வந்தால், கணவன் [மனைவி வேறுபாடுகளால் சோககீதம் ஒலிக்கத் தொடங்கும்.

அலுவலகங்களில், நிறுவனங்களில் இந்த ஆமைகள் புகுந்தால — கழுத்தறுப்புகள், ஊழலகள், மோசடிகள் பெருகிவிடும்.

நாடு, காடாக மாறுதிருக்க, இத்தகைய ஆமைகள் பற்றி இளவயதிலேயே நெஞ்சிற் பதிக்க வேண்டாமோ?

## தமிழ் இலக்கியத்தில் போர்க்களமும் பெண்கள் பங்கும்

சங்க காலத்தில் தமிழ் கூறும் நல்லுலகில் போர் வீரர்கள் பலர் இருந்தார்கள். போர்க்களம் போகும்போது ஆடிப்பாடி மகிழ்ந்து செல்வர். போர் அவர்கட்கு ஓர் இன்பத்தை அளித்தது. ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாகச் சங்க காலத்தில் போருக்குத் தயாராயினர். அன்புக் கணவனை தம் ஆசை மகனையும் போர்க்களம் அனுப்பி பகைவரைப் புறமுதுகோட வைத்த பெண் வீரம் சங்க இலக்கியத்தில் இனிதே பேசப்படுகின்றது.

மறக்குடி மங்கை ஒருத்தி மறவனுன சாதலனொருவனைக் கைப்பிடித்து ஒரு வீரக் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அவள் கணவனும் ஒரு போர் வீரன்; அவள் தமையனும் ஓர் போர்வீரன் இக்குடும்பம் இன்புற்றிருந்த காலை பகைவனின் நாடு பிடிக்கும் போர்ப் பறை முழங்கிற்று. போர் முழக்கம் கேட்டு அம் மங்கை நல்லாளின் தமையன் போர்க்களம் புறப்பட்டான். எதிரியுடன் நேர் நின்று போரிட்டு அப்போரில் வீரமரணம் எய்தினுன். வீரத் தழும்பு அவன் மார்பில் காணப்பட்டது. அவன் போரில் புறமுதுகிடவில்லை என்பது தெளிவாகியது. அடுத்தநாள் மீண்டும் போர்ப் பறை முழங்கிற்று. அப்போரை எதிர்கொள்ள தன் கணவனைப் போர்க்களம் அனுப்பினுள். அன்புக் கணவனும் நெஞ்சில் வேல் பட்டு மாண்டான். கணவனின் வீரமரணத்தைக கேட்டு இறும்பூதெய்தினுள் மனைவி. மறுநாளும் போர்ப் பறை கேட்டது.

மங்கை தன் தமையனை இழந்த நிலையிலும், தன் துணைவனை இழந்த நிலையிலும் போர் முரசு கேட்டு தன் ஆசைக் குழந்தையை அழைத்தாள். அன்புடன் அமுதூட்டினுள். தலைக்கு எண்ணெய் தடவி உச்சி மோந்து, வெளுத்து வைத்த ஆடையை விரித்து உடுத்தினுள். வேலைக் கையில் கொடுத்து செருக்களம் அனுப்பிப் பகைவரை வென்று வருமாறு வீறுப்புடன் கூறினுள். இவள் வீரத்தை மாசாத்தியார் என்னும் பெண் புலவர் பாராட்டிப் பாடியுள்ளார்.

ஒரு தமிழ் பெண்ணிற்கு நீண்ட நாட்களாகக் குழந்தைச் செல்வம் இல்லாமலிருந்

### புத்தொளி

தது. திருமணம் செய்து இருபது வருடங்களாகப் புத்திரப் பேறு கிட்டவில்லை. தவமிருந்து அவளது நாற்பதாவது வயதில் ஒரு குழந்தை பிறந்தது. அக்குழந்தை ஆண் குழந்தை. அழகான குழந்தை. அள்ளி அரவணைத்து அன்புடன் வளர்த்து வந்தாள். இப்பெண் மறவர் குடியைச் சேர்ந்தவள். அதனுல் புதல்வன் வளர வளர படைக்கலப் பயிற்சி அளித்து வந்தாள் தாய். படைக்கலப் பயிற்சி பெற்ற மகன் கட்டிளைஞனுய் வளர்ந்துவிட்டான். தாயோ நரையும் திரையமாக மூப்புப் பிணியுடன் காணப்பட்டாள். அவள் முதுமை எப்படி இருப்பினும் மகன் சிறுவனுக ஓடி ஆடி விளையாடித் திரிந்தான்.

ஒருநாள் திடீரென ஊரில் போர்ப்பறை கேட்டது. படை திரட்டினுர்கள். தனக்கு ஒரே மகனுக இருந்தும், தான் தள்ளாத வயதுப் பாட்டியாயிருந்தும் கடைசிக் காலத்தில் இவனைத் தவிரத் தனக்கு வேறு ஆதரவு இல்லை எனத் தெரிந்தும் புதல்வனைத் தட்டிக் கொடுத்துப் போர்க்களத்துக்கு அனுப்பத்துணிந்தாள். போர் நடந்தது.

தன்மகன் பகைவர் படையிலுள்ள பெரிய பெரிய யானைகளை எல்லாம் வாள் வீசிக் கொன்று மிக வீராவேசமாகப் போர் செய்தான். அவனுக்கு வெற்றி சேர்ந்தது. தொடர்ந்து போரிட்டான். கடைசியாக இந்தச்சிறுவன் ஓர் யானையின் மேல் பாய்ந்து வாள் வீசும்போது, அதனிடம் சிக்கி இறந்து போனுன்.

போர்க்களத்தில்] இறந்த செய்தி பெற்ற தாய்க்கு, மூதாட்டிக்கு எட்டியது. 'ஆ' களிறு எறிந்து என்மகன் பட்டனன்; யான் மகனைப்பெற்ற தன் பயனை இப்போது பெற்றுவிட்டேன். குழந்தையைப் பெற்றபோது, குழந்தை பிறந்ததற்காக எனது உள்ளம் மகிழ்ச்சியால் நெகிழ்ந்தது. அந்த மகிழ்ச்சி எவ்வளவு? என் மகன் தன் கடமையைப் போர்க்களத்தில் நன்கு செய்தான். நான் அவனுக்காகச் செய்த முயற்சிகளெல்லாம் இப்போது பயன் தந்தன'' என்று எண்ணி எண்ணி மகிழ்ந்தாள். இதயம் பூரித்தாள்.

ஒரு பொருளைப் பெறுகின்ற காலத்தில் உண்டாகும் மகிழ்ச்சியைவிட, அதனுலான பயன் நிறைவேறினுல் அந்த மகிழ்ச்சி உலகினும் பெரியது. மறக்குடியில் பிறந்த ஒருவனுல் உண்டாகும் பயன், போர்க்களத்தில் பகைவரை எதிர்த்து வீரமாய்ப் போரிடுவதுதான் இறப்பதும் பிழைப்பதும் பொரு

(9-ம் பக்கம் பார்க்க)

## உலக உதைபந்தாட்ட "தங்க கிண்ணத்தின் வரலாறு"

"உலக கிண்ண'' உதைபந்தாட்டப் போட்டியில், வெற்றிவாகை சூடும் நாட்டுக்கு உகந்தளிக்கப்படும் அரிய பரிசு சுத்தத்தங்கத்தில் உருவாக்கப்பட்ட, வெற்றிக் கிண்ணச் சிலையாகும்.

1930ம் ஆண்டு முதன் முதலில் ஆரம்பமான இவ்வுலக உதைபந்தாட்டப் போட்டித் தொடருக்கு, எப்படி ஒரு வரலாறு உண்டோ, அதேபோல் அனைவரினதும் கவனத்தை இன்று ஈர்த்துள்ள, இவ்அரிய தங்கக்கிணத்துக்கும் ஒரு பின்னணியுண்டு.

1.8 கிலோ எடையுள்ள, புடம்போட்ட சுத்த தங்கத்திலான இக்கிண்ணத்தின் பெறுமதி 36,800 ஸ்ரேலிங் பவுணுகும். (இலங்கை ரூபா பெறுமதி 21 லட்சம்.)

இரண்டு தடவைகள் களவாடப்பட்ட இத்தங்கக்கிண்ணம் பல தடவைகள் புதுப்பிக்சப்பட்டு, இன்று உரோமாபுரியில், பிரபல்யம் வாய்ந்த அரசாங்க வங்கி ஒன்றில் பலத்த இராணுவ-பொலிஸ் பாதுகாப்புடன் வைக்கப் பட்டுள்ளது.

உலக உதைபந்தாட்டச் சம்மேளனம் (Fifa) முதலில்இந்த வெற்றிக்கிண்ணத்தை வடிவமைக்கும் பொறுப்பை, பிரான்சுதேசத்து பிரபல்ய சிற்பக் கலைஞர் திரு. அப்டேல் லாபீரிடம் ஒப்படைத்தது.

1.8 கிலோ எடையுள்ள தங்கத்தில், இரு இறக்கைகளையுடைய 'வெற்றித் தேவதை' எண்கோண பாத்திரத்தை தன் இரு கரங்களாலும் தலைக்குமேல் ஏந்தியவண்ணம் நிற்பது போன்று அவர், அவ் வெற்றிக்கிண்ணத்தை வடிவமைத்தார்.

இக்கலைஞரினுல் வடிவமைக்கப்பட்ட, தங்க வெற்றிக்கிண்ணம், இன்றுவரை உலகஉதைபந்தாட்ட நாடுகளின் ''கனவில்'', அரும்பெரும் பொக்கிஷமாகத் திகழ்ந்து வருகின்றது.

1966ம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற 8வது உலகக் கிண்ணப் போட்டியில் இங்கிலாந்தே வெற்றிவாகை சூடியது. போட்டி ஆரம்பிப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன் லண்டன், ''வெஸ்ற்மினிஸ்ரர்'' மண்டபத்தில் பலத்த பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருந்த இந்த தங்க கிண்ணம் களவாடப்பட்டது.

உலகப் புகழ் பெற்ற ''ஸ்கொட் லண்யாட்'' துப்பறியும் பொலிஸ் இலாகாவுக்கு இது ஒரு பெரும் சவாலாகவே, அமைந்தது. இங்கிலாந்து நாடுமுழுவதிலும் மின்னல் வேகத்தில், தேடுதல் வேட்டை தொடர்ந்தது.

இரண்டு வாரங்களின்பின்பு, தெற்கு லண்டனில் வசித்து வந்த டேவிட் கோர்பேல்ட் என்பவருடைய வளவின் பின்புறத்தில் செடி கொடிகளுக்கிடையில் அநாதரவாக கிடப்பதை, அவருடைய வீட்டுநாய் கண்டுபிடித்தமைக்காக, அவருக்கு 3,000 டவுண்ட் பரிசுத்

நமது விளையாட்டு நிருபர் 'தேவா'

தொகையும் வழங்கப்பட்டது.

1970ம் ஆண்டு பிரேஸில் நாடு மூன்ருவது தடவையாக, உலகப் போட்டியில் வெற்றி பெற்றமையால், தங்கக்கிண்ணம் அந்தநாட்டுக்கே சொந்தமாகியது.

இதன் காரணமாக புதிய வெற்றிக்கிண்ணத்தை அதே வடிவமைப்பில் உருவாக்கும் பணி இம்முறை, இத்தாலிய நாட்டு சிற்பக்கலைஞரான கில்வியோ ஹஸானிக்கா என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

1982ம் ஆண்டு ஸ்பெயினில் நடைபெற்ற 12வது உலக கிண்ணப் போட்டியில் இத்தாலி மூன்ருவது தட வையாக வெற்றிபெற்றமையால், அக் கிண்ணமும் இத்தாலி நாட்டுக்கு சொந்தமானது.

பிரேஸில், சொந்தமாகப் பெற்றுக்கொண்ட முதலாவது வெற்றிக்கிண்ணம், 1983ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ம் திகதி, பிரேஸில் நாட்டு உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் காரியாலயத்தில் பலத்த பாதுகாப்பின் மத்தியில் வைக்கப்பட்டிருந்த அந்தத் தங்கக் கிண்ணம் களவாடப்பட்டது. இதுவரை மீட்கப்படாமலே இருக்கிறது.

தற்போதுள்ள உலக கிண்ணம், 1984ம் ஆண்டு முன்னைய வடிவமைப்பில் 1·8 கிலோ தங்க எடையில் 21லட்சம் ரூபா செலவில் உருவாக்கப்பட்டது. இக்கிண்ணத்தின் அடித்தளத்தில், 13 தங்கத் தகடுகள் பொருத்தப்பட்டு, 1930 முதல் 1986 வரை உலக சாம்பியன்களாக வந்த நாடுகளின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

இப்புதிய கிண்ணத்தை இம்முறை யார் சுவீகரித்துக் கொள்ளுவது என்பதில் கடும் போட்டி இருக்கும்.



# ஈழத்துப் புதுக் கவிதை - புதிய பார்வை

(4)

பத்தொன்பதாம் நூற்றுண்டுவரை தமிழ் இலக்கிய வடிவம் என்பது செய்யுள் வடிவம் தான். இலக்கிய வடிவம் மட்டுமல்ல; எழுத்து வடிவம் என்பதே செய்யுள் வடிவம் தான் என்று வெகுகாலம் கருதப்பட்டு நடைமுறையிலிருந்து வருகின்றது!

வான நூலாக இருந்தாலும், வைத்தியநூலாக இருந்தாலும் தத்துவம், தர்க்கம் போன்ற பிற அறிவுத்துறை நூல்களாக இருந்தாலும் அனைத்தும் செய்யுள் நடையில்தான் எழுதப்பட்டு பேணப்பட்டன.

ஆனல் காலவோட்டத்தின் இருபதாம் நூற்றுண்டின் இறுதிப் பகுதியிலிருந்து ஆங்கிலேயக் கல்விமுறையின் தாக்கத்தினலும், மேலைத்தேய இலக்கிய வடிவ, கலாசார ஊடுருவல்களினலும் புதுக் கவிதையின் எண்ணங்கள் தமிழிலும் தோன்றின. அதனூடே புதுக் கவிதை இயக்கம் இயங்க ஆரம்பித்தது.

தி. ச. வரதராசனைப்போல் சோதி, விஜயன், தங்கம் போன்ருேர் ஈழத்தில் புதுக் கவிதையின் முன்னேடிகள் ஆவர். 'சோதி' 'க' முதலியோர் வாழ்க்கை நிலைமையை பற்றிய கருத்துக்களை வெளிப்படுத்துகின்றபோது; விஜயன், ராம், தங்கம் முதலானேர் வாழ்க்கை பற்றிய நம்பிக்கைக் குரலை எழுப்புகின்றனர்,

'சிரஞ்சீவி குரல் கொண்டு' என்ற தலைப்பில் எழுதிய புதுக் கவிதையில் ஒரு பகுதியில் இருந்து;

நீலக் குமிழ் விடும்
ஆழமான நதிகள்
நவமான செல்வமணி
திரளும் கனிகள்
இவற்றின் மேல்
புதுயுகம் பூத்தது
அதன் சிகரம்
உயர்ந்துயர்ந்து
உழைப்பும் வியர்வையும்
இனிது
என்ற முழக்கம்
செய்கின்றது
சிரஞ்சீவிக் குரல்
கொண்டு!!

புதுயுகம் பூத்த எங்கள் மண்ணின் இயற்கை வெளிப்பாட்டை இக் கவிதை வரிகளிலிருந்து நாம் காணக் கூடியதாகவுள்ளது.

'தங்கம்' என்பவர் மற்றொரு புதுக் கவிதை முன்னேடி, இவரும் ஆரம்ப கால சட்டத்தில் அதாவது 1940 களில் பல கவிதைகளையும் எழுதியவராவார்.

உலகத்தை இன்பச் சுரங்கமாகக் கண்டு கவிதை படைத்தார் தங்கம்.

வெட்ட வெளியாகத்
தெரிந்த இடம் இன்று
விண்ணையொட்டும்
சொர்ண பூமியாகத்
தெரிகிறது
அந்தகாதத்தின் குகையிலே
அதிசய தீபம்
அதன் ஒளியிலே அகிலமே
இன்பச் சுரங்கம்.

என்றவாறு அவற்றின் புதுக் கவிதையின் ஒரு பகுதியமைந்துள்ளது.

ஆரம்ப காலத்தில் புதுக் கவிதையாளர் எல்லோரும் இயற்கை பற்றியும், வாழ்க்கை பற்றியும் மாத்திரமே புதுக்கவிதை படைத்தனர் என்று கூறுவதற்கில்லை. ஈழகேசரிப் பத்திரிகையிலும், மறுமலர்ச்சி இதழ்களிலும் எழுதியோர் சமூகச் சார்புடைய முற்போக்கு சார்ந்த கருத்துக்களையும் உள்ள பக்கமாகக் கொண்ட புதுக் கவிதைகளை எழுதியிருந்தமை குறிப்பிடத் தக்கது.

(செ. யோகராசா- வானம் பாடி)

'வித்யா' என்ற கவிஞர் 'வேலை நிறுத்தம்' என்ற தலைப்பிலே எழுதிய கவிதை அக் கால கட்டத்தில் வெளிவந்த கவிதைகளுள் குறிப்பிடத் தக்கவையில் ஒன்ருகும்.

ஜில் என குளிர்ந்த
ஆழமிகுந்த ஆறு
அதன் கரையிலே
அசையாத சமாதிபோல
தன்னந் தனியே நிற்கும்
தொழிற்சாலைக்
கட்டிடம் உதவாத
சிமிந்திக்கூடு
எத்தனை ஜன்னல்கள்,
அர்த்தமற்ற விண்
வெளிகள்
ஒளிகெட்ட ஓனன் கண்
போலத் திருதிரு
என்று விழிக்கின்றன;
புகை மண்டி மண்டி
வேகமாகக் கனிந்த
இருள் மூட்டம்
நர்த்தனம் செய்யும்
புகைக் கூண்டு
இன்று மத்தியான
சங்கு ஊதவில்லை
அப்பா வேலைக்கு
போகவில்லை
வேலைநிறுத்தமாம்.

ஓர் இளங்குழந்தை தன் தந்தை வேலைக்குப் போகவில்லை என்பதை எடுத்துக் காட்டுகின்றது இப் புதுக் கவிதை.

தமிழ் நாட்டில் வானம் பாடிக் குழுவினர் புதுக் கவிதையின் உள்ளடக்கத்தைத் சமுதாயசார்புடையதாகமாற்றுவதற்கு முன்னரே ஈழத்தில் அத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவிட்டன] இதற்கு உதாரணமாக மேற் கூறப்பட்ட 'வேலை நிறுத்தம்' கவிதை சான்ருகும்.

தென் இந்தியாவில் மீரா, நா. காமராசன் முதலியோர் புதுமையான உவமைகளைக் கையாளுவதற்கு முன் ஈழத்திலே இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு விட்டதாக 'செ. யோகராசா' வானயபாடி இதழில் எழுதியுள்ளார். இதற்கு எடுத்துக் காட்டாக:

சூரியன் வந்தவேலையைச்
செய்யட்டும்
கூட்டுபவனைப்போல
பணக்காரன் ஏழையை
வதைக்கட்டும்
அரிவாளைப்போல
உடம்பெடுத்தவன் உயி
ரோடு போராடட்டும்
நண்பர்களைப்போல

(10ம்- பக்கம் பார்க்க)

சார்ள்ஸ்

## மாறவில்லை

வர்ணனைக் கெல்லாம்
அப்பாற்பட்டது உன்
வடிவழகு பெண்ணே
ஆனல் உன்
மனதின் சுமைகளின்
அழுத்தங்களுக்கும் இங்கு
இவர்கள் கொடுக்க
வில்லை உரு
அதனல் தானு
புதுயுக ராமர்களும்
உன்முகத்தை மட்டும்
பார்க்கிருர்கள்,
அந்த முகத்துக்குள்
ஏக்கங்களுடன் தவிக்கும்
இன்னுமொரு முக
மிருப்பதை
உணர மறுக்கிருர்கள்.

—கே. சாந்தி

# வண்டமிழ் வன்னிலக் காட்சி - 1

# குறிஞ்சிக் காட்சி

குறிஞ்சி மலையும் மலை சார்ந்த நிலமாம். நீர்க் கோளத்தின் புறத்தே மண்ணில் சத்து மலினய்பட்டு நீர்ச்கோளத்திற்குரிய உழற்சி காரணமாக அதன் நடுவிடத்தில் ஒன்றுசேர்க்கப்பட்ட பண்துசுள்கள் நாளடைவில் மருத்து வளரும் பருவத்தையடைகின்றது. காலம்செல்லச் செல்ல தண்ணீருக்கு மேல் வெளிப்படுகின்றது. கூர்மமாய் இருந்த பூமி வளர்ந்து நீருக்கு மேல் வெளித்தோன்றிய காலந்தான் உலகில் பஞ்சபூதங்கள் முழு நிலைப் பட்ட காலமாகும். இவ்வாறு நீரின் நடுவே பருத்து வளர்ந்து வெளியே தோன்றிய நிலப் யகுதியே இம் மலை நிலம் என்க. இதையே ''கற்றேன்றி மண் தோன்ருக் காலம்'' என்றும்

''ஒங்கு திரை வியன்
பரப்பின்
ஒலி முந்நீர் வரம் பாகத்
தேன் றூங்கும்
உயர்ச்சிமைய
மலைஞாறிய வியன் ஞாலம்

என்றும் மிகவிரிவாக மதுரைக் காஞ்சியிலும் வருதல் காண்க. கல்லிலும், கற்பூமியிலும் பளிங்கெனந் தெளிந்த சுனை நீரைக் குடித்து. அச் சுனைகளிலிருந்து பெருகி ஓடும் அருவி நீரில் குளித்து, வெயிலும் மழையும் தாக்காவண்ணம் மலைக்குகைகளிலிருந்தும் வந்தனர் ஆதித் தமிழ்மக்கள், இலர்கள் பின்மலையின் அடிவாரங்களில் நாட்டங் கொண்டு ஒரு மலையைப் போலவே எல்லாப் பக்கங் களிலும் ஒரே அளவாய்ப் பல மலைகள் சூழ்ந்திருக்கும். இம் மலைகளின் மத்தியில் வாழத் தொடங்கினர். இம் மலையில் உட்புறத்தேயும் வெளிப்புறத்தேயும் உள்ள மரங்கள், கொடிகள், செடிகள், மலைநெய், தேன் போன்றவைகளாலும் களிறு, குரங்கு, பன்றி, புலி போன்ற விலங்குகளாலும் ஆதித் தமிழர்கள் சற்று மனப் பக்குவம் அடைந்து தாயன்பு, இனப் பற்று, மானம், காதல் போன்ற பண்புகளை பெரிதும் பெற்றனர்.

மலையிலும், மலை நடுவிடங்களிலும் வாழ்ந்த மக்கள் குறவர், வேடர் எனப் பெயர்கள் பெற்ருர்கள். இவர்கள் தோற்றத்தால் குள்ளராய் இருப்பதுமல்லாமல் மனத்தாலும் குறுகியநிலை உடையவராய் இருந்தனர். பற்றி குறவர் எனப் பெயர் பெற்றனர் எனலாம். தான் செய்யும் செயல்கள் பிறருக்கு என்ன துன்பம் செய்யும் என்பதைச் சிறிதும் கருதாமல் தன் நன்மை ஒன்றையே கருதுவர். இப் பெயர் மலை மக்களின் குணத்தையொட்டி வந்த பெயரெனலாம்; தன் நன்மைக்கு எதை விரும்புகிருர்களோ அதைச் செய்து முடிப்பவராதலின் வேடர் எனப்பட்டனர் எனலாம். வேடன் என்ற சொல்லுக்கு பகுதி வேள் வேள் - எனப் பொருள்படும். தன்னலத்தால் தான் எதை விரும்புகின்ருர்களோ அதைச் செய்யும் இயல்புடைய மலைமக்கள் மலையையும் மலை நடுவிடங்களையும் விட்டு மலையின் புறத்தேயுள்ள காடுகளில் வசிக்கும் மன வாற்றலைப் பெற்றனர். அப்போது அவர்கள் கானவர் எனப் பெயர் பெற்றனர். இந் நிலை மலைமக்கள் மலை வாழ்வுக்கு விடைகூறும் ஒரு நிலை அமைகின்றது, இக் கானவர் காட்டகத்தில் கால்கள் நட்டு அக் காலிலே கைசேர்த்துப் பிணைத்த மரங்களில் இலையால் வேய்ந்த சிறு வீட்டில் வசிப்பவர். இவ் வீட்டைச் சுற்றி நாய்கள் குரைத்து விளையாடும். மான், பன்றி போன்ற உயிர்களைக் கொன்று உண்ணும் தொழிலில் ஈடுபடுவர். கொலை விருப்பத்தில் மிக்கவர். மலைப்புறத்தில் ஒரு புறம் காடு, இன்னெரு புறம் காடு அற்ற பாலை. இப் பகுதியில் சேர்ந்தவர்கள் கொள்ளையடிப்பதில் விருப்பம் மிக்கவர். இதற்கு கொலையையே உபாயமாகக் கொள்வர். இவர்கள் எயினர் எனப் பெயர் பெறுவர். இவர்கள் கானவரினும் கொடூரமானவர்கள். இவ்வாறு குறிஞ்சின் அகத்தில் குறவரும் அதன் புறத்தில் கானவரும் எயினரும் வாழ்பவராவர். இதில் புலவர்கள் குறிஞ்சியின் ஒரு பகுதியான பாலையை குறிஞ்சியில் சேர்க்காது மலையையும் மலைக்காட்டையுமே குறிஞ்சியின் உரிப்பொருளுக்கும் கொண்டார்கள். குறிஞ்சியில் குறவர் உயர்ந்தராகவும் கானவர் தாழ்ந்தவராகவும் கருதப் படுவர். நற்றிணையில் தொல் கபிலர் என்னும் புலவர் இக் கருத்தை மிகத் தெளிவாக தோழிவாயிலாக நமக்குத் தந்துள்ளார். ''தலைவனே கொம்மையூதி கௌவிக் கொல்லும் நாய்களோடு காட்டின் கண்ணே ஆராய்கின்ற விருப்பமுற்ற வலிய மானை வேட்டையாற் கைப்பற்றும் வேட்டுவ வீரரின் மகளிர் என எம்மை நினையாதீர். நாங்கள் குறமகளிரேம். மலையிலிருக்கின்ற கொடிச்சியேம். தினைக் காவலின் கட்டிய நீண்ட காலையுடைய கட்டுப் பரணைக் காட்டு மயில்கள் தாம் இருக்கும் இடமாகக் கொண்டு அதன் கண் தங்கா நிற்கும் எம்மூர் இம்மலையினைத் தாயிருக்கிறது. ஆதலால் நீ இப்பொழுது நின்னூர்க்குச் செல்லாது எம்மூரை அடைந்து பெரிய மலையின் கண்ணே தோன்றி வளைந்த மூங்கிலாலாக்கிய குழாயில் நிரம்பிமுற்ற வைத்த கள்ளைப் பருகி வேங்கை மரத்தையுடைய முன்றலிலே யாம் அயரும் குரவையையுங் கண்டு மகிழ்ந்து பின்னல் நின்னூரை அடைவாயாக' என்பது அவர்வாக்கு. இதில் மலையகக் காட்சி மிகத் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. பயிர்த் தொழில் பண்பும், விருநதயரும் வேட்கையும் உடைய நாமே உயர்ந்தவர்கள் என்று குறவாழ்க்கையின் விழுப்பம் விளக்கமாக அமைந்திருக்கிறது. தீமை விளையாமல் தன்விருப்பத்தை நிறைவேற்ற முயலுதலால் கொள்ளை வாழ்வு மலர்கின்றது. காணவன் உயிர்களைப் பிடித்ததால் கொலை வாழ்வு வாழ்வும் அமைகின்றது. ஆனலும் குறிஞ்கி வாழ்வில் கொள்ளை வாழ்வு சிறந்ததையும் கொலைவாழ்வு இழிவுடையதாயும் கருத்துப்படுதல் காண்க. இவ்வாறு குறிஞ்சி மக்களின் தன்னலத்தில்எழுந்த விருப்பம் கொள்ளையில் பெருகியும் கொலையில் அருகியும் நிற்றலும் தெளிவாகின்றது. இவ்வாறு குறிஞ்கி வேட்கை நிலமாய் கொள்ளையில் விரிபட்டு இருத்தல் காண்க.

இக்கொள்ளை நிலையே பழந் தமிழர் புணர்ச்சி என்று உரிப்பொருளில் கூறினர். தீமைவிளையாமல் தம் விருப்பம் நிறைவேறல் புணர்ச்சியாலன்றி வேறென்ருலும் முடியாது. நெருங்கிப் பயிலுதலே புணர்ச்சியெனப்படும் இதுவே புணர்ச்சியின் பொதுநிலை உள்ளத்தால் கலத்தல் அதன் சிறப்பு நிலை. எனவே புணர்ச்சி பெறுதல் என்பது தெளிவு ஆண் பெண்ணைப் பெறுதலும் பெண் ஆணைப்பெறுதலும் ஆகிய கைக்கோள் நிலைகளே புணர்ச்சியாம் என்க. முதல் தமிழ் நிலத்தில் கொண்டு தலைக்கழிதலே புணர்ச்சி முறைக்கு முதல் எடுத்த வழியாம். இதுவே கொள்ளை முறை. ஆண் ஒரு பெண்ணைக் கண்டு பற்றிக்கொண்டு போகும் போது அவள் நிலையையும் நிறையையும் ஆராயாது செல்லலையே நாம் ஈண்டு கொள்ளை முறை என்பது என்க. இந் நிலை பகுத்தறிவால் பண்பட்டு ஆணும் பெண்ணும் உள்ளத்தால் கலந்து மெய் பெறும் வகையில் கைகோள் சிறந்தது என்க.

இத்தகு புணர்ச்சி மறைவாகவே நடைபெற்றது. மறைவு களவு எனப்படும். தம்மை அன்றிபிறர் எவரும் இல்லாத அமையத்து வஞ்சித்துக் கொண்டு போதலே அல்லது உள்ளத்தால் புணர்ச்சி உணர்வு கொள்ளுதலே நடைபெறுதலின் இச் சேர்க்கையை களவுப் புணர்ச்சி என்பர். இவ்வாறு மலைமக்கள் கொலை,கொள்ளை களவு போன்ற இயல் பூக்கத்தில் பெரிதும் செல்லுதலால் இந்நிலை இன்பம் சிறுமைப் படாதாம் என்க. இக்கருத்திலேயேமலை நிலத்தைக் குறிஞ்சி என்றனர். இச்சொல் குறு + இன் + இ எனப்பகுபடும். இப்பகு சொற்களின் பொருளை நோக்கினுல் குறுமையான இனிமை உடையது என்பதேயாகும். சிற்றின்பத்திற்குச் சிறந்த சேர்க்கையில் செழிக்கும் ஆண் பெண் இருவரில் பெண்ணை அழகுமிகுந்தவளாகக் காணப்படுகிருள். இவள் கொடிச்சி என்று தலைமக்கள் பெயரில் வருவதால் கொடி போன்ற மெல்லிய தோற்றத்தவள் எனத் தெரிகின்றது. இவள் நிறம் கருமையல்ல. குறிஞ்சி மலரின் பொன்னிறப்பொலிவு தோன்றும் மேனி என்னும் பொருளில் ''குறிஞ்சி நாண்மலர் புரையும் மேனி'' என நற்றிணை நவில்கின்றது. இனி அவளின் உருவம் பாவை அன்ன வனப்பினள் என்பதால் காணும் காளையர் அகத்தில் காதற் கனலை மூட்டிவிடும் கவினுடையாள் இத்தகு அழகால் கொள்ளை கொண்ட தலைவன் தலைவியினடத்துத் தான் கொண்ட காதலை ''கோடாப் புகழ் மாறன் கூடல் அனையாளை'' தொண்டியன்ன நின் பண்பு''

''முட்டாச் சிறப்பின்
பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயல்
கிழை யொழிய வாரோன்''

என்று பேசுவது சிந்திக்கத் தக்கதன்ருே.

வான் அளாவிய மலைகள் அம்மலையின் மீதும், அம்மலைகளையடுத்தும் வளர்ந்துள்ள பெருமரங்கள் எங்கு நோக்

(9ம் பக்கம் பார்க்க)

புலவர் நா. சிவபாதசுந்தரனர்

## சிறுகதை

**வீ**ட்டின் முன் ''ஹோலு''க்குள் தொலைக் காட்சிப்பெட்டி இரைந்து கொண்டிருந்தது. அக்கம் பக்கத்துப் பெண்கள் சின்னஞ் சிறுசுகள் என்று கூட்டமும் கும்மாளமுமாக அமைதியைக் குலைத்துக் கொண்டிருந்தார் கள். சாப்பிட்டுவிட்டு ஆறுத லாகச் சில நிமிடங்கள் ஓய்வு எடுக்கவேண்டும் என்று நினைத்த கந்தப்பு மாஸ்ரருக்கு இவர்களுடைய ஆரவாரங்கள் எரிச்சலை ஏற்படுத்தின.

''உந்தப் பெடி பெட்டை யள் ஏனப்பா கத்துதுகள்... படிப்பெல்லாத்தையும் கைவிட்டுப்போட்டு எல்லாம் ரீ. விக்கு முன்னாலை தவம் செய்யுதுகள்... உதுகள் என் னெண்டு சோதினை எழுதப் போகுதுகள்... இவளவை தாங் கள் அழியிறதும் பத்தாமல் உந்தக் குஞ்சு குருமண்களையு மெல்லே பழுதாக்கிறாளவை... எனக்கு வாற ஆத்திரத்துக்கு உந்த ரீ. வியைத் தூக்கி நிலத் திலை அடிச்சுப்போடுவன் கண் டியோ?...'' உள்ளே மனைவி யிடம் எரிந்தார் கந்தப்பு மாஸ்ரர்.

''உங்களுக்கு வயதுபோட்டு தப்பா... உதுகளிலை ஆர்வம் குறைஞ்சு போச்சுது... அதுக் காக சின்னஞ்சிறுசுகளின்ரை சந்தோஷங்களை ஏனப்பா கெடுக்க நினைக்கிறியள்?... உங்களுக்குப் பிடிக்காவிட் டால் பேசாமல் இருங்கோ வன்... உங்களை ஆரன் பாக்கச் சொல்லிக் கேட்டவையே...'' அவர் மனைவி பிள்ளைகளுக்கு ஆதரவாக வக்காலத்து வாங் கினார்... தான் சொல்லுவது பிள்ளைகளுக்கு மட்டுமல்லாது மனைவிக்கும் கூடப் புரிய வில்லையே என்று அவர் மனம் வேதனைப்பட்டது...

'எல்லாரும் சந்தோஷமாய் இருக்கவேணும் எண்டதுதான் என்ரை ஆசையும் கூட... ஆனால் உதுகள் ரீ. வியிலை நல்ல விஷயங்களையே பாக்குது கள்?... விரசமான கேடுகெட்ட சினிமாப்படங்களையும்... காட் சிகளையுமெல்லே பாக்குது கள்... உதுகளைப் பாத்துப் பாத்து... உதிலை ஊறிப்போ னால்... நாளைக்கு ஒரு ஆரோக் கியமான சமுதாயம் எப்படி யப்பா உருவாகும்?... நல்ல நல்ல கலை நிகழ்ச்சிகளைப் பாருங்கோ... தரமான நாட கங்களைப் பாருங்கோ... சமு தாயத்தை முன்னெடுத்துச் செல்லக்கூடிய விஷயங்களைப் பாருங்கோ... ஒருத்தரும் தடுக்கமாட்டினம்... அதை விட்டுப் போட்டு இப்பிடியான படங்களை ஏன் பாக்க வேணும்?...'' அவர் அமைதி யாகத்தன் கருத்துக்களைக் கேட்டார்.

''ஐயா கொஞ்சம் சத்தம் போடாதேங்கோ... கொப்பி இரையுது... அதுக்குள்ளை நீங் களும் கத்த... ஒண்டும் விளங்குதில்லை...'' ரீ. விக்கு முன்னாலிருந்த அவருடைய மூத்தமகள் மல்லிகா செல்ல மாகச் சிணுங்கினாள்.

''நான் கத்தேல்லை... நீங் கள் நல்லவடிவாகப் பாருங்கோ...'' ஆத்திரத் தோடு கைத்தடியைத் தூக்கிக் கொண்டு வெளியே செல் கிறார் கந்தப்பு மாஸ்ரர்.


அந்தக் காலத்திலை பட மென்றால் எத்தினை வாழ்க் கைத் தத்துவங்களை எடுத்துக் காட்டும்?... ஒவ்வொரு பட மும் ஒவ்வொரு குறிக்கோளை விளங்கப்படுத்தும்... அந்த காலத்துச் சினிமாப் பாடல் கள் கூட எவ்வளவு தத்துவங் களைப் போதிக்கும்?... இப்ப வாற படங்களும், பாட்டுக் களும் ஒரு சதத்துக்கு உத வாது... கொலை கொள்ளை நிறைந்த காட்சிகளும்... இரட்டை அர்த்த வசனங் களும்... அவனவன் காசு சம் பாதிக்கிறதுக்காக என்னவோ எல்லாம் படத்திலை சேர்க்கிறா ன்கள்... இதுகளைப் பாத்துப் பாத்து எங்கட இளம் சந்ததி கள் குட்டிச்சுவராகப் போகுது கள்... கடவுளே... நீதான் இதுகளை எல்லாம் காப்பாற்ற வேணும்... தனக்குள் பிரார்த்தித்தபடி தடியை ஊன்றியூன்றி நடக்கிறார் அவர். அவருக்கு தேகத்தைத் தழுவும் காற்றும், அமைதியும் தேவைப்பட்டது.

இப்படியான நேரங்களில் நேராக அவர் இந்த முருகன் கோவிலுக்குத்தான் வருவார். கோவிலுக்கு முன்னால்...... நாலு திசைகளுக்கும் தன் கிளை களை விரித்துப் பரப்பி நிழல் வழங்கிக்கொண்டிருக்கும் மரு தமரம்...... ஒரு தடவை...... ''மதுரைச் சோமு'' யாழ்ப் பாணம் வந்திருந்தபோது...... இந்த மருதமரத்தின் கீழ மைந்த மேடையில்... ''மருத மலை மாமணியே முருகையா'' என்று பாடியபாடல் மிகவும் கரகோஷத்தைப் பெற்றுக் கொடுத்தது.

மரத்தின்கீழே சுமைதாங்கி களாகவும், இருக்கைகளாக வும் பயன்படுகின்ற சீமெந்துத் திண்ணைகள்...... அவற்றில் குருவிகளின் எச்சங்கள் பொட் டுப் பொட்டாய்க் காய்ந்து கிடந்தன. இலையொன்றை எடுத்து திண்ணையை உரஞ்சித் துடைத்துவிட்டு அமர்ந்து கொள்கிறார் கந்தப்பு மாஸ்ரர்.

எதிரே... . கை ஓயாமல் கடலைவறுத்துக் கொண்டிருக் கும் பெண் முத்தம்மா...... அவளை இருபது வருஷங்களுக் கும் மேலாக அவருக்குத் தெரியும்... வன்னிமாவட்டத் திலிருந்து பிழைப்புக்காகத் தன் மூன்று பிள்ளைகளுடன் யாழ்ப்பாணம் வந்தவள்.

எண்பத்துமூன்று இனக்கல வரத்தில் மூத்தமகனைப் பலி கொடுத்தவள்...... இரண்டா வது மகன் தலைமறைவாகிவிட் டான். மூன்றாவது பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்து விட்டுத் தன்கையே தனக் குதவி என்று வாழ்பவள்... வருஷத்தில் ஒருதடவை நடை பெறும் திருவிழா நாட்களில் கோயிலுக்கு வரும் பக்தர் களின் செருப்புக்களை இலவச மாகப் பாதுகாத்துக் கொடுப் பது இவள் செய்யும் சேவை.




சற்றே தள்ளி.. துலா இல் லாத பழங்கிணறு... அதற்கு அடுத்ததாய்... பழம், பாக்கு, வெத்திலை, கற்பூரம், சோடா விற்கும் கனகரத்தினம்கடை... அவருடைய மகளொருத்தி காதல் தோல்வியால் தற் கொலை செய்துவிட்ட நாளி லிருந்து...... வீடும் கடையுமா கவே வாழ்வை நகர்த்திக் கொண்டிருக்கிறார் கனகரத் தினம்.

கறுப்புப் பிறேம்போட்ட கண்ணாடியுடன் எந்தநேரமும் பத்திரிகை படித்துக்கொண்டி ருக்கும் இந்தக் கனகரத்தினத் துக்கு அனைத்துச் செய்திகளும்

**ஆதிலட்சுமி இராசையா**

பாடம். எத்தனையாம் ஆண்டு எங்கே என்ன நடந்ததென்று திடீர் திடீரெனக் கேட்டா லும்...... திகைக்காமல் சொல் லக்கூடியவர்.

முன்பென்றால்... மாலைநேரங் களில் ஊரிலுள்ள வயது சென் றவர்கள் பத்துப் பதினைஞ்சு பேர் இங்கே சேருவார்கள்...... அவர்களிற்சிலர் இப்போது இறந்துவிட்டார்கள். இன்னும் சிலர் மரணத்துக்காகக் காத் திருக்கிறார்கள்.

கனகரத்தினம் இப்போது தான் கந்தப்பு மாஸ்ரரைக் கண்டிருக்க வேண்டும்.........'' என்ன வாத்தியார்...... வெளி நாட்டுக் கடிதம் ஏதாலும் வந் ததே......'' என்றார் உற்சாகத் தோடு.

''ஓமோம்...... வந்தது...... மூத்தவன் பிரான்சிலை இருந்து எழுதியிருக்கிறான்......'' .என்னவாம்......''

''காசு அனுப்புகிறானும்... மருதனாமடம் ரோட்டுக்கரை யிலை கிடக்கிற தோட்டக் காணிக்குள்ளே...... மற்றவ ளுக்கு வீடுகட்ட அத்திவாரம் போடட்டாம்......''

''நீங்கள் ஓமென்று சொல் லிப் போட்டியளே வாத்தி யார்?......'' கனகரத்தினத் தின் குரலில் பதற்றம்.

''ஓமென்று சொல்லுற துக்கு எனக்கென்ன விசரே கனகு?...... விளைநிலங்களுக் குள்ளை வீடுகளைக்கட்டிப் போட்டு...... பிறகென்ன மனி சர் காத்தையே குடிக்கிறது... அவங்கள் அறிவு தெரியாமல் எழுதுறாங்கள்......''

''இப்பவுள்ள பெட்டை பெடியளுக்கு இதுகள் விளங்கு தில்லை வாத்தியார்...... எத் தனை தோட்டக்காணியளுக் குள்ளை வீடுகள் எழும்பிவிட் டுது...... வெளிநாட்டு உழைப் புக்காரராலை இப்ப ஊரிலை உழைக்கிறவங்களுக்கு மதிப் பில்லை...... தோட்டஞ்செய்ய வெட்கப்படுகிறாங்கள்......'' கனகரத்தினம் சொன்னார்.

''என்ரை பொம்பிளைப் பிள்ளையள்...... கலியாணங் கட்டாமல் இருந்தாலும் பற வாயில்லை...— விளைநிலங்களுக் குள்ளை வீடுகள் கட்ட நான் உயிர் உள்ளவரை சம்மதிக்க மாட்டன்......'' என்று வீரா வேசத்தோடு கூறினார் கந் தப்பு மாஸ்ரர்.

இவருடைய பேச்சுக்களை யும் இடைவெட்டிக்கொண்டு, மோட்டார் சயிக்கிள் ஒன்று உறுமலுடன் வந்து நின்றது. சாரம், சேட் அணிந்த இரு இளைஞர்கள்......

''சேர்...... எங்களைத் தெரி யுதோ......'' வந்தவர்களில் ஒருவன் அவரிடம் கேட்டான்.

''எனக்குப் பார்வை அவ் வளவு தெளிவில்லைத்தம்பி... ஆக்களைத்தெரியுது... ஆனா... ஆரென்று அடையாளம் தெரி யேல்லை...'' என்றார்.

''நாங்கள் உங்களிட்டைப் படிச்சனாங்கள் சேர்... உங்க ளிட்டை ஒரு உதவிகேட்டு வந்திருக்கிறம்...''

''என்ன உதவி தம்பி கேட் கப் போறியள்?... என்னாலை செய்யக்கூடிய உதவி என்றால் கட்டாயம் செய்வன்... சொல் லுங்கோ...''

''வந்து சேர்... எங்கடை சமுதாயம் பலவழிகளிலை சிக் கிச் சீரழிந்து கொண்டிருக் குது... இதுகளிலை இருந்து... மக்கள் சமூகத்தை விடுவிக்க விரும்புறம்... இதற்கு உங் கடை பங்களிப்பும் தேவை...''

மாஸ்ரருக்கு அதிர்ச்சியும் ஆனந்தமும் மாறிமாறி ஏற் பட்டன. ''தம்பியவை... நீங் கள் சொல்லுறது உண்மை தான்...... இதைப் பற்றி நானும் பலதடவை சிந்தித் திருக்கிறன்... சிந்தை கலங்கி யிருக்கிறன்... சொந்த மனைவி பிள்ளைகளையே திருத்த முடி யேல்லை...'' என்றார்.

அந்த இளைஞர்கள் ஒரு வரை ஒருவர் பார்த்துத் தமக்குள் எதுவோ பரிமாறிக் கொண்டனர். இப்போது மற் றவன் பேசினான்.

''சேர்... நீங்கள் சொல்லு றதும் உண்மைதான்... எங் கடை இனமும். மொழியும் பல்வேறு காரணிகளாலை சீர் குலைந்து போயிருக்கு... இவற்றை நிவர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பு எங்க ளுக்கு ஏற்பட்டிருக்கு.. இந் தப் பொறுப்புக்களை நிவர்த்தி செய்ய நாங்கள் பெருமுயற்சி செய்யிறம்... உங்களிட்டைப் படிச்ச எத்தனையோ மாண வர்கள் தேசப்பற்று மிக்கவர் களாய்... விளங்குறதைக் காணுறம்... நீங்கள் ஒத்து ழைத்தால் நாங்கள் இந்தச் சமுதாயச் சீர்கேடுகளை நிச்சய மாய் நிவர்த்தி செய்வம்...''

''தம்பி... உங்களைப்போன் றவர்களின்ரை சமூகப்பற்றுக் காக நான் பெருமைப்படுகி றன்... சந்தோஷப்படுகிறன்... நான் பெற்ற பிள்ளைகள் அன் னிய நாட்டு உல்லாச வாழ்க் கையிலும்... இறக்குமதிக் கலாச்சாரங்களிலும்... சிக் குண்டு சீர்கெட்டு நிற்கிற நேரத்திலை... என்னட்டைக் கல்விகற்று... என்ர கருத்துக் களாலை ஈர்க்கப்பட்டு... நிற் கிற உங்களைப் பார்க்க என்ர மனம் நிறைஞ்சு போகுது... உங்களாலை... உங்களைப் போன்ற இளைஞர் களாலை... எங்கட சமுதாயம் முன்னேற்றமடை யும் என்கின்ற நம்பிக்கை என்ர மனதிலை துளிர்விடுகி றது... உங்களுக்குச் சகல விதத்திலும் என்ர பங்களிப்பு கிடைக்கும் தம்பி...'' உணர்ச்சி வசப்பட்டுப்போய் பேசிய கந்தப்பு மாஸ்ரர், வியர்வை துடைப்பதற்காகத் தன் மூத்தமகன் பிரான்ஸிலி ருந்து எழுதிய கடிதத்தை மடி யிலிருந்து எடுத்துக் கொள்கி றார்.

இரு இளைஞர்களும் இன் முகத்தோடு விடைபெறுகிறார் கள். கனகரத்தினம் கடைவா சலில் யாரோ ஒரு பெண் கோயிலுக்கு அர்ச்சனைப் பொருட்கள் வாங்குவதும்... முத்தம்மா வியர்வையில் குளித்தபடி கடலை வறுப்பதும் அவர்கண்களை உறுத்துகின் றன.

(யாழ் கற்பனை)

---

## இலங்கை வேந்தன்

இலங்கையை ஆண்ட மன்ன வனும்
இதிகாசங் கூறு உண்மை யிதாம்
பலகாலம் தவமேற் கொண்ட வனும்
பல்வரங்கள் பெற்று வாழ்ந்த வனும்

★ ★

பத்துத் தலைகளை உடைய வனும்
புட்பக வூர்தியிற் பறந்த வனும்
தித்திக்குஞ் சாமகானம் தெரிந்த வனும்
சிரங்கொய்து வீணை செய்த வனும்

★ ★

இமயத்தைப் பெயர்க்க முயன்ற வனும்
இங்கிதமாய்ப் பாட வல்ல வனும்
அமைவுடன் வீணை மீட்ப வனும்
அரண் பத்தியாற் சிறப்புற்ற வனும்

★ ★

மண்டோதரி அன்பின் மனை வியாம்
மாலியவான் முறைப் பாட்ட னும்
திண்ணிமை மிகவுடை கும்ப கருணன்
சீர்பெறு விபீடணன் தம்பிய ராம்

— மணிமன்றன்

---

## எதற்காக வாழவிரும்புகிறீர்?

நூறுவயது வாழ விரும்பிய ஒருவர் ஹிமாலயத்தில் தவ மிருக்கும் ஒரு சாமியாரை நெருங்கி தன் விருப்பத்தை வெளியிட்டார் ''நீ காப்பி டீ சாப்பிடுவாயா? ''பாலைத் தவிர வேறு எதுவும் சாப்பிடுவ தில்லை. அதுகூட இல்லாமல் என்னால் இருக்கமுடியும்.

''மதுப்பழக்கம்?''

''கிடையாது''

பெண்கள் விஷயம்?

''பக்திமயமான எண்ணங் கள் மட்டும்தான் உண்டு.

உலகத்தில் எதனையும் அனு பவிக்க விரும்பாதநீர் பின் எதற்காக பூமியில் நூறுவயது வரைவாழ விரும்புகிறீர், சாமி யார் ஆச்சரியப்பட்டுக் கேட் டார்?

# பல்சுவை விருந்து

## அதிசய சிறுமி

சிலர் அபூர்வ சக்தியை பெற்று வருகிறார்கள். தெய்வீகச்சக்தி என்பது இதுதானா? 1963 ஜனவர் 12ம் தேதி ரஷ்ய சிறுமியான ரோசா குலே சோவா என்பவளுக்கு முழுவதுமே கண்பார்வை மங்கி முழுக்குருடு ஆகிவிட்டாள். ஆனால் அதன் பிறகு அவள் கைகளால் தொட்டே நிறங்களை கண்டறியும் அபூர்வ சக்தியைப் பெற்றிருந்தாள்.

## 10 கோடி டாலர்

உலகிலேயே மிக விலை உயர்ந்த ஓவியம் உலகப்புகழ் பெற்ற இத்தாலிய ஓவியர் லியோனார் டாவின்சி, தீட்டிய மோனாலிசா ஓவியந்தான். இதன் இன்றைய விலை 10 கோடி டாலருக்கு மேல். இதுவரை வேறு எந்த ஓவியத்திற்கும் இவ்வளவு விலைமதிப்பு இருந்ததில்லை.

## எதிர்பாராத அதிர்ஷ்டம்

எகிப்தில்ஹோட்டல் போர்ட்டராக வேலை பார்ப்பவர் இமான்யாசின். இவர் தனக்கு இப்படி ஓர் அதிர்ஷ்டம் கிடைக்கும் என்று நினைக்க வேயில்லை. ஹோட்டலில் தங்கியிருந்த ஓர் அமெரிக்கப் பெண்ணுக்கு இவரைப் பார்த்ததும் கண்கலங்கியது. தன்னிடமிருந்த 18,000 டாலர் மதிப்புள்ள வைரநெக்லஸ்ஸை அவருக்கு கொடுத்துவிட்டார். யாசின் திகைத்தபோது அவள் கூறியதாவது; ''வைத்துக் கொள்ளுங்கள். உங்களைப் பார்த்தால் 1924ல் காணமல் போன என் அப்பாவை போல்இருக்கிறீர்கள்.''

## கனவு

சாதரணமாக ஒவ்வொருவரும் இரவில் நான்கு முதல் ஆறு கனவுகள் வரை காண்கிறார்கள்.

## இனிப்பு சுவை

பூனைக்கு சீனியின் இனிப்புச் சுவையை அறியும் சக்தி இல்லை.

## முதல் பத்திரிகை

இந்தியாவில் வெளி வந்த முதல் பத்திரிகை –ஹிக்கிஸ் பெங்கால் கஸட். 1980 ஜனவரி 29ல் கல்கத்தாவிலிருந்து வெளியானது.

## பற்கள்

மலேசியாவில் பிரில்ஸியண்ட் விங் என்பவருக்கு 68 வயதிதாகிறது. இவரைப் பார்த்து டாக்டர்கள் அதிர்ந்து போய் ஆச்சரியத்தில் மூழ்கியிருக்கிறார்கள். காரணம், பிரில்ஸியண்ட் விங்கிற்கு இத்தனை வயதிற்கு பிறகு பற்கள் இப்போது புதிதாக முளைத்திருப்பது தான்.

## ஆங்கில கவிதை

தாகூர் ஆங்கிலத்தில் எழுதிய ஒரே கவிதை குழந்தை என்பதாகும். மற்றக் கவிதைகளை முதலில் வங்காள மொழியில் எழுதினார்.

## போல்ட்பொயிண்ட் பேனா

மெக்ஸிக்கோவை சேர்ந்த மிலியன் ரேனால்ட்ஸ் என்பவர் தான் போல்பொயிண்ட் பேனாவைக் கண்டு பிடித்தார்.

## முதல் கவிதை

பாரதியார் எழுதிய முதல் கவிதையான தன்மை இரக்கம் 1904ம் ஆண்டு மதுரை விவேகபானு மாத இதழில் வெளியானது. தமிழில் சுயசரிதை பாடிய முதற் கவிஞர் பாரதியார்தான்.

## கேலிச் சித்திரம்

கேலிச் சித்திரங்கள் முதன் முதலில் இத்தாலியில்தான் வெளியாகின. இந்தியாவில் கேலிச் சித்திரங்கள் முதன் முதலாக வெளியிட்ட பெருமை ஹிந்துஸ்தான் டைம்ஸ் 'பிரி பிரஸ் ஜேர்னல்' ஆகிய பத்திரிகைகளையே சாரும்.

## கைகள் இல்லை கார் ஓட்டினார்

இங்கிலாந்தில் ரானிவெஸ்ட் என்ற இளைஞருக்கு வயது 18. பிறக்கும்போதே இவருக்கு இரு கைகளும் இல்லாமல் பிறந்தார். ஆனால் இந்த இளைஞருக்கு கார் ஓட்டஆசை. தனது விடா முயற்சியினால் கால்களால் ஸ்ரியரிங் ஓட்ட வல்ல காரைத் தயாரித்து லைசென்சும் பெற்றிருக்கிறார்.

## கல் நாதசுரம்

கும்பகோணம் கும்பேஸ்வரர் கோவிலில் கல்லினாலான நாதசுரம் இருக்கிறது. இதை இக்கோயிலின் நாதசுர வித்துவான் குஞ்சிதபாதம்பிள்ளை வாசிப்பதுஉண்டு. மிகப்பழமையான அதிசயம் மிக்க இந்த கல்நாத சுரத்தில் 10 நிமிடங்கள்தான் வாசிக்க முடியும்.

## பெண்மீனின் அருகில் ஆண்மீன் தற்கொலை!

இத்தாலியில் ராகியோ காலப்யொவில் இது நடந்தது. சில மீனவர்கள் சேர்ந்து ஒரு பெரிய வாள் மீனைப் பிடித்தார்கள். ஆனால் அவர்கள் அதைப் படகில் கொண்டுவரும்போது அந்தப் பெண் மீனின் காதலனான ஆண்வாள்மீனும் அந்தப் படகைத் தொடர்ந்து வந்தது. மீனவர்கள் தாங்கள் பிடித்த வாள் மீனை கூறுபோடக் கடற்கரைக்கு படகிலிருந்து இறக்கி இழுத்துச் சென்றார்கள். அவர்களுக்கே ஆச்சரியம் அளிக்கும் வகையில் ஆண்மீனும் கடலைவிட்டு வெளியேறி தன் காதலியின் பெண்மீனகிருல் விழுந்து இறந்தது. மீன் இனத்தில்கூட இப்படிஒரு காதல்!

# அங்கும் இங்கும்

## அண்ணாவின் சிறுகதை

அறிஞர் அண்ணா 'சௌமியன்' என்ற புனைப் பெயரில் முதன் முதலாக 'ஆனந்த விகடன்' பத்திரிகையில் 'கொக்கராக்கோ' என்ற சிறு கதையை எழுதினார். இக்கதை வெளியான ஆண்டு 1934. அவர் 'சௌம்ய' ஆண்டு பிறந்தவர் என்பதால் அப்பெயரை தனக்கு வைத்துக் கொண்டார்.

## அத்தனையும் ஆண்குழந்தை

1717 முதல் 1774 வரை வாழ்ந்திருந்த துருக்கி சுல்தான் மூன்றாவது முஸ்தாபாவிற்கு பல மனைவிகள் - இவர்களுக்கு பிறந்த குழந்தைகள் 582. அத்தனையும் ஆண் குழந்தைகள்.

## தொடர் கதை

ஆங்கில கதாசிரியர்சார்ள்ஸ் டிக்கன்ஸ்தான் முதலில் தொடர்கதை எழுதும் பழக்கத்தை உருவாக்கியவர்.

## 30,000 கோவில்

தமிழ்நாட்டில் 30,000க்கும் அதிகமான பெரிய கோயில்கள் இருக்கின்றன.

## இறக்கும்வரை பாடினார்

பிரபல பாடகர் காலஞ்சென்ற கண்டசால வயதாகி உடல் நலம் சரியில்லாமல் இருந்தபோதுகூட அவரை சினிமாப் படத் தயாரிப்பாளர்கள் விடவில்லை. ஒரு நாள் பல்லவி, அடுத்த நாள் சரணம் என்று நேரம் கொடுத்து அவருக்கு சௌகரியமான வேளையில் பாடல்களைப் பதிவுசெய்தார்கள். கடைசி சாகும்வரையும்விடாமல் அவரைப் பயன்படுத்தியிருந்தார்கள்.

## பழமொழி

நீதிபதி ஒரு தவறு செய்தால் அது ஒரு புதிய சட்டம். கணிதமேதை தவறுசெய்தால் அது புதிய தத்துவம். விஞ்ஞானி தவறு செய்தால் அது புதுக்கண்டுபிடிப்பு. பெற்றோர் தவறு செய்தால் அது ஒரு புதிய குழந்தை.

—எம்மனுவேல்

வேலை மனிதனைக் கொல்வது இல்லை. கவலைதான் கொல்லும்.

—பீச்சர்

நாம் மேலே போகும்போது வேகத்தைகட்டுப்படுத்தலாம். ஆனால் கீழேவரும்போது அது முடியாது.

—நெப்போலியன்

சொல்வதுபோல் செய்து காட்டுங்கள். செய்து காட்டுவதை மட்டும் சொல்லிக் காட்டுங்கள்.

—ஷேக்ஸ்பியர்

புனிதமான செயல்களால் வாழ்வதே புகழ் எனப்படும்.

—சாக்ரடீஸ்

எதையும் என்னால் செய்ய முடியும் என்று எவன் உழைக்கின்றானோ அவனுக்குத்தான் வெற்றி கிடைக்கும்.

—பிராபோ

மனம் ஒரு கண்ணாடி. கவலை அதில் படியும் அழுக்கு. சிரிப்பு அந்த அழுக்கை போக்கும் திரவம்.

—ஜாமி

நான் என்மதிப்பை இழந்தால் என்னையே இழந்ததாகும்.

— ஷேக்பியஸ்

## பாடும் குருவி

வளர்ப்பு பிராணிகளை வைத்து வியாபாரம் செய்துவந்தார் ஒருவர். அவரிடம் ஒரு புதுமாதிரியான குருவி இருந்தது. அந்தக் குருவி பாடுமா என்று கேட்டார் ஒருவர். 'பாடும் என்றார் வியாபாரி. விலைபேசி அதை வாங்கிக்கொண்டுபோய்விட்டார் அங்கு வந்தவர்.

சொற்ப நாட்களில் அவர் மீண்டும் வியாபாரியிடம் வந்தார். ஆத்திரத்தோடு 'உங்கள் குருவிக்கு கால் முறிந்துதுள்ளது. என்னை ஏமாற்றிவிட்டீர்களே' என்று வியாபாரியிடம் அந்த நொண்டிக் குருவியைக் காட்டினார்.

'என் குருவி பாடும் என்றுதானேசொன்னேன். ஆடும் என்று சொல்லவில்லையே' என்றார் அந்த வியாபாரி.

# நாட்டு நடப்புகள்

### ஆஸ்திரியா

வியன்னாவைச்சேர்ந்த ரொட்டிக்கடைக்காரரான ஜோசெப் செண்டல் தனது 40 வது பிறந்த நாளை 40 சிறுவர்களுக்கு கேக்குகளைக் கொடுத்து கொண்டாட விரும்பினார். ஆனால் வந்த சிறுவர்களோ 150 பேர். அனைவரும் அட்டகாசமாக கடைக்குள் புகுந்து துப்புரவாக காலி செய்து விட்டு சென்று விட்டார்கள்.

### சீனா

ஷேவ் கிகெயல் கப்பலோட்டியாக வேலை பார்ப்பவர் செவ் சாவ். கப்பலில் பிரயாணம் செய்த ஓர் இளம் பயணி கப்பலில் கிதார் வாசித்த போது அது செவ்சாவ்கிற்கு பிடிக்கவில்லை ஆனால் அந்த இளைஞனே வாசிப்பதை நிறுத்துவதாக தெரியவில்லை. உடனே செவ் சாவ் அந்த கிதார் இளைஞனை அலாக்காகத்தூக்கி வெளியில் கடலில் வீசி எறிந்து விட்டார். பிறகு சக பிரயாணிகள் அவனுக்கு கை கொடுத்து தூக்கி காப்பாற்றினார்கள். பாவம் பிழைத்துவிட்டு போகட்டும் என்று.

### அமெரிக்கா

நடிகையான குளோரியா பஸ்ஸி ஹெய்னி ஐம்பதாவது தடவையாக அதிவேகமாக காரை ஓட்டிய குற்றம் சுமத்தப்பட்டபோது அதைக் கொண்டாடும் வகையில், போக்குவரத்து பொலிஸ் காரருக்கு ஒரு தங்க சிகரட் லைட்டரை பரிசாக அளித்தாள்.

### ஜப்பான்

தங்க குளியல் அறையில் குளித்து தங்கத் தொட்டிலில் தூங்கப் பெரிய கோடீஸ்வரர்களால்தான் முடியுமா? நம்மைப்போன்றவர்களாலும் முடியும். ஜப்பானில் டோக்கியோவில் உள்ள ஓர் ஹோட்டல் முதலாளி தங்கத்தொட்டியை உடைய தங்கக் குளியல் அறையைக் கட்டியிருக்கிறார். இதில் குளிக்க, அறையில் ஒரு குட்டித்தூக்கம் தூங்க 200 ரூபா கொடுக்கவேண்டும்.

# ஞாயிறு மஞ்சரி.

## சுகாதாரக் குறிப்புகள்

### வாந்தி

குமட்டல், வாந்தி வருவது போல் உணர்ச்சி ஏற்பட்டால் ஓர் எலுமிச்சம் பழத்தை இரண்டாக வெட்டி ஒருபாகத்தை கொட்டைகளை அகற்றிவிட்டு சீனி, தூவி சாப்பிட்டுக் கொண்டேயிருந்தால் குமட்டல் ஏற்படாது. வாந்தியும் நின்று விடும்.

### நீரழிவு

தினசரி நடப்பதனால் நீரழிவு நோயாளிகளுக்கு ஏராளமான நன்மைகள் ஏற்படுகின்றன. இரத்ததிலுள்ள சீனியின் அளவு குறைந்து விடுகிறது. நீரழிவு நோயாளிகளுக்கு சீனியின் அளவு குறைவது நல்லது தானே.

## அவனும் ஒரு திருடன்

பெங்களூரில் ரியாஸ்பாஷா என்பவர் ஒரு வீதியில் நின்றுகொண்டிருந்தபோது படு வேகமாக ஓர் ஆட்டோ ரிக்ஷா அவனருகில் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய மூவர் பாஷாவின் கைக்கடிகாரம், பர்ஸ் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு ஆட்டோவில் ஓடமுயன்றார்கள். பாஷா உடனே 'கொலை ஐயோ கொலை' என்று சத்தம்போட்டு பலரைக் கூட்டிவிட்டான். அவர்கள் ஆட்டோவை பள்ளத்தில் தள்ளிவிட, எல்லோருமாகச் சேர்ந்து திருடர்களைப் பிடித்து பொருட்களை மீட்டு பாஷாவிடம் கொடுத்தார்கள். அப்போது அங்குவந்பொலிஸார் [பாஷாவே பெரிய பிக்பொக்கட் திருடன் என்ற உண்மையை கூறினார்கள்.

# "தவில் கலையில் ஆர்வமுள்ள எவரும் முன்னுக்கு வரலாம்"

தமிழீழத்தின் கலைச் சிறப்பை இமயம்வரை உயர்த்தி, உலகெங்கணும் வாழும் தமிழ்மக்களுக்கு பெருமை தேடித் தந்துகொண்டிருப்பவர் தமிழுலக தவில் மேதை கைதடி கே. பழனிமலை.

இந்தியாவில் தலை சிறந்த தவில் வித்துவான்களோடு நேருக்கு நேர் தவில் வாசித்து எமது மண்ணிற்கு புகழ்தேடித் தந்தவர்.

கலைநயமிக்க அவரது கைவிரல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நயம் பேசும். இலங்கை இந்தியா. சிங்கப்பூர், மலேசியா போன்ற இடங்களிலுள்ள பிரசித்திபெற்ற ஆலயங்கள் யாவற்றிலும் தவில் வாசித்த பெருமை எங்கள் பழனியையே சாரும்.

## முதலாவது கச்சேரி

தனது பன்னிரண்டாவது வயதில் யாழ்ப்பாணம் சிவன் கோயிலில் முதலாவது தவில் கச்சேரி நடத்திய பழனி இன்று 57 வயதுவரை எண்ணற்ற கச்சேரிகளை நடத்தியுள்ளார்.

ஓய்வொழிச்சலின்றி தொடர்ந்து 45 வருடங்கள் இந்தக் கலைச் சேவையை அவர் ஆற்றி வந்திருக்கிறார்.

தவில் துறையில் சிறந்த பாண்டித்தியமும், அனுபவமுள்ள அவர் வித்துவச் செருக்கோ, தலைக்கனமோ இன்றி அமைதியான முறையில் பணியாற்றி வருகிறார்.

இணுவில் கிருஷ்ணமூர்த்திப் பிள்ளை, யாழ்ப்பாணம் சின்னத்துரை திருச்சேரை ரி. சி. முத்துக்குமாரசாமிப்பிள்ளை, கொருநாடு பழனிவேல்பிள்ளை, சிதம்பரம் கோவிந்தசாமிப் பிள்ளை, பிரமதேசம்லட்சுமணர், யாழ்ப்பாணம் இராச கோபாலபிள்ளை போன்றதவில் மேதைகளை தனது குருவாக கொண்டுள்ளதாகத் தெரிவிக்கும் கலைஞர் பழனிமலை இவர்களில் பலருடன் ஒரேமேடையில் தவில் வாசித்தமையையிட்டு பெருமைப்பட்டுக்கொள்கிறார்.

எங்கள்நாட்டைப்பொறுத்த வரையில் கலைஞர்கள் கௌரவிக்கப்படுவது மிகக்குறைவாகஇருக்கிறது. எத்தனையோ துறைகளில் சிறந்த கலைஞர்கள் எமது மண்ணிலே இருந்தும் அவர்கள் கவனிக்கப்படாமலிருப்பதாக கவலை தெரிவித்தார் திரு. பழனிமலை.



## பாராட்டுக்கள்

"தவில்துறையில் நீண்டகால அனுபவமுடைய தங்களுக்கு வழங்கப்பட்ட பாராட்டுக்களை பற்றி கூறமுடியுமா" என்று கேட்டபோது "என்னைப் பொறுத்தவரையில் எனக்கு எத்தனையோ பட்டங்களும், பாராட்டுதல்களும் வழங்கப்பட்டுள்ளன அவற்றை வகைப்படுத்திச் சொல்ல முடியாதுள்ளேன்.

1967, 68, 69, 70ம் ஆண்டுகளில் இந்தியாவில் நடைபெற்ற அண்ணாமலைப் பல்கலைக் கழக விழாக்களிலே சிறப்பான முறையில் கௌரவிக்கப்பட்டேன்.

## பட்டமளிப்பு

இவ்விழாக்களில் ஒருநாள் எனது தவில் வாசிப்பினுல் மகிழ்ந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினர் பொன்னுடை போர்த்திக் கௌரவித்து "அகில இந்திய இசை விழாப் புகழொளி ஸ்ரீசரவேக சுரதாளக்கியான கலியுகவரத பாலநந்திஸ்வர தவில்மேதை" என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார்கள்.

1968ம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டில் அப்போது தமிழ்நாட்டின் முதல்வராக இருந்த அறிஞர் சி. என். அண்ணாதுரை தலைமையில் என்னைப் பாராட்டிக் கௌரவித்தார்கள்.

### தமிழுலக தவில் மேதை கைதடி பழனிமலை

## பொன்னுடை

இதே ஆண்டு இந்தியாவிலுள்ள கருவூரில் நடைபெற்ற அகில உலக நாதஸ்வர சக்கரவர்த்தி ரி. என். இராஜரத்தினம்பிள்ளை அவர்களுடைய விழாவில் தவில் வாசித்தபோது திருமுருக கிருபானந்த வாரியார் பொன்னுடை போர்த்திப் பாராட்டினுர். சிங்கப்பூர், மலேசியாவிலும், தவில்கச்சேரிநடாத்தி பாராட்டுப் பெற்றேன்.

## தீவிரஈடுபாடு

"தவில்துறையில் உங்களுக்கு ஆர்வம் வரக் காரணம் என்ன என்று கேட்டபோழுது 'எனது பெற்றோர் இத்துறையோடு சம்பந்தப்பட்டவர்களாகஇருந்மையாலும். சிறுவயது தொட்டே நான் என்ன செய்யத் தொடங்கினுலும் அவற்றினை ஆர்வத்தோடு செய்யும் பழக்கமும் தான் இத்தொழிலில் நாட்டம் கொள்ளக் காரணமாக இருந்தது.

இககலையில் நான் ஈடுபடத் தொடங்கியதும் ஒவ்வொரு நாளும் புதிய புதிய அனுபவங்கள் என்னிடம் ஏற்பட்டது. அதனுல் இத்துறையில் அதிதீவிரமாக ஈடுபட்டேன் அதுவே இன்று பல வெற்றிகளை என்முன் குவித்துள்ளது.

## பழனியின் வாரிசுகள்

"தவில்துறையிலுள்ளசுலிவு நெளிவுகளைத் தெரிந்து வைத்திருக்கும் தாங்கள் உங்களுக்குப்பின் இதில் ஈடுபட உங்கள் வாரிசாக யாரையும் வளர்க்கிறீர்களா?"

"ஆம்.எனது மூத்த மகன் ஜெயபாலன் என்பவரும், இளையவரான பஞ்சமூர்த்தி என்பவரும் என்னைப்போலவே இத்துறையில் அதிக ஈடுபாடு காட்டி வருகிறார்கள்.

மூத்தவர் அண்மையில் சில நாடுகளில் தவில் கச்சேரியை நடத்தியுள்ளார்.

இதேபோல் பத்து இளம் தவில் வாசிப்போர் என்னிடம் தவில் கச்சேரி பயின்று வருகிறார்கள் இவர்களும் எதிர்காலத்தில் சிறந்து விங்குவார்கள்" என்றார்.

## முறையான பயிற்சி

"தவில் வாசிப்பதனை முறையாகப்பயின்றீர்களா அல்லது கேள்விஞானத்தின் மூலம் கற்றுக்கொண்டீர்களா?" என்று கேள்வியை எழுப்பியபோது "ஏற்கனவே நான் சொன்ன எனது குருவிடம் ஒன்பது வயதில் இத்துறையை முறையாக பயின்றுள்ளேன்" என்றார்.

## வரவேற்பு

உங்கள் தவில் கச்சேரிக்கு இந்தியாவிலா இலங்கையிலா வரவேற்பு அதிகம்?"

"தமிழர்கள் வாழுமிடமெங்கும் இத்துறைக்கு அதிக வரவேற்பு இருக்கிறது. எல்லோருடைய வரவேற்பும் தான் என்னை இந்த நிலைக்கு உருவாக்கியது" என்று ஒரு

(10-ம் பக்கம் பார்க்க)

சந்திப்பு:
**என். கே. துரைசிங்கம்**

---

# கலை உலகம்

# நோய் நீக்கற் கலைஞர்களின் நாடகங்கள்

சரியாகச் செய்யப்படும் ஒன்று அழகானதாக அமைந்துவிடும் என்பதால் அது கலையாகிவிடுகிறது. இத்தகைய சரியை நோக்கி நிற்கும் ஐந்து கலைப்படைப்புகளை கடந்த மாதம் 30ம் திகதி புதன் கிழமை இரவு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் காணும் வாய்ப்புச் சிலருக்குக் கிட்டியது. அப்படைப்புகள் ஒவ்வொன்றும் தனித்தனியே இருபது நிமிடங்களை அழகும் இனிமையும் நிறைந்த மணித்துளிகளாக மாற்ற முனைந்து நின்றன. இவர்களின் இந்த முயற்சியின் பெறுபேருக அவையினர் ஏறக்குறைய நூறு நிமிடங்களைப் பயனுள்ள பொழுதாகக் களித்தனர். இந்த மண்ணில் நாடகம் வாழும், வளரும் என்று நம்பிக்கையோடு எழுந்து சென்றனர்.

அன்று அங்கு நடைபெற்றது யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட மாணவர் ஆண்டு தோறும் கொண்டாடும் "வைத்தியர் வாரத்தை" ஒட்டி நடத்தப்படும் பல வகைப் போட்டிகளுள் ஒன்றான நாடகப்போட்டியாகும். இந்தப் போட்டிக்கான நாடக எழுத்துருவை ஆக்கியவர், நடித்தவர், நெறிப்படுத்தியவர், ஒப்பனை, உடையலங்காரம் செய்தவர் யாவரும் அம் மாணவர்களே. இது போட்டிவிதிகளால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள். இப்போட்டிகள் கடந்தநான்கு ஆண்டுகளாக ஒழுங்காக, காத்திரமாக நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாண்டின் நாடகப்போட்டி, வைத்தியபீட வளவுக்கு வெளியே கைலாசபதி கலையரங்கில் நிகழ்த்தப்பட்டதால் 'பிறத்தியார்' சிலரும் இவற்றைப் பார்த்து மகிழும் வாய்ப்பினைப் பெற்றனர்.

ஆண்டு அடிப்படையில் மாணவரிடையே போட்டி நிகழ்ந்தது. அனைத்து நாடகங்களும் எமது மண்ணில் புரையோடிக்கிடக்கும் சில நோய்க் கூறுகளைக் கண்டறிய முனைந்து நின்றன. நாட்டு நிலைமையால் வைத்திய மாணவரின் படிப்பு 'பல்லாண்டு' பாடி காலத்துக்கிழுத்து துகிலுரிதலும் இன்னும் போலிப் பகட்டும், கொள்ளையும், களவும், ஊழலும் மலிந்த இன்றைய நிலையையும், மரணங்களும், அவலங்களும், அரசியல் சாரங்களும் அந்த வைத்திய மாணவர்களால், துறைசார்நிபுணத்துவத்தோடு நாடிபிடித்துப் பார்க்கப்படுகின்றன.

ஏறக்குறைய அனைத்து நாடகங்களும் அரங்க உணர்வோடு எழுதப்பட்டு நடிக்கப்பட்டன; அவைக்காற்றப்பட்டன; அவையோரின் ஆர்வத்தையும் கவனத்தையும் தம்பால் ஆற்

**குழந்தை ம. சண்முகலிங்கம்**
(யாழ். பல்கலைக்கழகம்)

நிற்பதையும், 'மக்கள் பணத்தில் படித்துப் பட்டம்பெற்ற வைத்தியர் மக்களில் அக்கறை கொள்ளாது, அக்கரைப் பச்சையில் மேயச் செல்வதும், சீதனக் கொடுமையையும், கற்பெனும் பெயரால் பெண் கல்லாக்கப்படுவதும், எமது பண்பாடாக அமைந்துவிட்ட சுயநலமும், தொண்டு மகளிர், தம்பியர், பெண்டு பாஞ்சாலி அனைவரையும் பணயம்வைத்துச் சூதாடும் தருமனைச் சம

றுப்படுத்தின. பொதுப்படையான தயாரிப்பு, கையாளப்பட்ட உத்திகள், மேடை அசைவுகள், மேடைப் பயன்பாடு, உடை, ஒப்பனை, இசை, காட்சியமைப்பு என்ற வகையில் இந்த நாடகங்கள் அனைத்தையும் நெறிப்படுத்தியோரும், நடித்தவரும் தம்மால் இயன்றவரை செம்மையுறச் செய்தனர்.

போட்டியில் முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்ட "ஜீவயாகம்" என்ற நாடகம் மேற்கூறிய பண்புகளை உணர்வுபூர்வமாக உள்வாங்கி வெளிப்படுத்திய ஒன்றாக அமைந்திருந்தது. இரண்டாவதாக வந்த "பிணம் தின்னும் சாத்திரங்கள்" என்ற நாடகமும் மூன்றாவதாக வந்த ',வண்ணப் பூச்சுகள்" என்ற நாடகமும் மேற்கண்ட பண்புகளை உணர்வுபூர்வமாகவும், அர்த்த

(10-ம் பக்கம் பார்க்க)



(கலாகேசரி ஆ. தம்பித்துரையின் 58வது பிறந்த தினத்தையொட்டி 'பண்பாட்டின் மூன்று கோலங்கள்' என்ற நூல் வெளியிடப்பட்டபோது நூலாசிரியர் கலாகேசரி ஆ. தம்பித்துரைக்கு, துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி துர்க்கையம்மன் தேவஸ்தானம் சார்பில் சன்மானம் வழங்குகிறார்.)

# மங்கையர் மஞ்சரி

## பெண்ணுரிமை பற்றி பேசிப்பயனில்லை சிந்தனை மாற்றம் வேண்டும்

"இந்து சமுதாயம் ஒரு பெரிய தவறிழைத்து விட்டது. கணவனுக்கு மனைவியை அளவிற்கு மிஞ்சி அடிமைப்படுத்தி விட்டது. இதன் பலனுகச் கணவன் சில சமயங்களில் இல்லாத அதிகாரத்தை எல்லாம் செலுத்த ஆரம்பிக்கின்றுன்; கடைசியில் மிருகமாகவே ஆகி விடுகிறுன்!" இப்படிக் கூறியவர் வேறுயாருமல்ல, மகாத்மாகாந்திதான்.

பெண் விடுதலைக்காகப் போராடிய பலரில் அவரும் ஒருவர்.

பலர் உபதேசங்கள் செய்தும், உருக்கமாக வேண்டியும் ஆண் சமுதாயம் பெண்களை மதித்துப் போற்றும் காலம் மாறிவிட்டதா?

"வினையே ஆடவர்க்கு உயிரே!" என்ற கொள்கை பண்டைக் காலத்தில் இருந்து கணவனே உழைக்கவேண்டும். கணவன் உழைத்துவரும் பொருளைச்சிக்கனமாகச் செலவழித்து, எதிர்காலத்துக்காகச் சேமித்து வைத்துக் கணவனுடன் சரிநிகர்சமானமாகச் குடும்பம் நடத்துவதே பெண்ணின் கடமையாகக் கருதப் பட்டது.

ஆனுல் இன்றே, திருமணத்திற்காக ஆண்கள். தம்மைத் தாமே சந்தைப்பொருளாகிக் விட்டனர்.

உயிரற்ற பொருட்கள்தான் சந்தைக்கு வந்துகொண்டிருந்த காலம்மாறி, இன்று உயிருள்ள பொருட்களுக்கும் விலைபேசும் நிலை உருவாகி விட்டது. பட்டங்களைக்காட்டி தொழில் அந்தஸ்த்துக்களை காட்டிச் சீதனத்தை. வீடுகளை, நகைகளை, நன்கொடைகளை விலைபேசி வாங்கும் சமுதாயம் உருவாகியிருப்பது கொடுமையினும் கொடுமை!

பெண் ஆணுக்குத் தோழி; ஆணைப்போலவே அறிவுத் திறன் உடையவள் ஆணினுடைய சிறு சிறு அம்சங்களிற்கூட கலந்து கொள்ளவும், அவற்றிலே பங்கு பெறவும் பெண்ணுக்கு உரிமையுண்டு.

இன்றைய நவீன சமூகப் பொருளாதார அமைப்பிலே பெண்களும் தொழில் செய்ய வேண்டிய நிலை உருவாகிவிட்டது. ஆண்களைப் போலவே தொழிற்கல்வியும் கற்கவேண்டிய சட்டாயம் வந்துவிட்டது.

இந்தச் சூழலில், பெண்கள் அடிமைகள் என நினைத்துச் சமுதாயக் கொடுமைகளிலிருந்து விழிப்புணர்ச்சி ஏற்படவேண்டும்.

பெண்களும் விழிப்புணச்சியோடு புதிய சிந்தனைகளைக் கொண்டிருக்கவேண்டும். பெண்களை அழகுபடுத்திப் பார்த்து அதிலே ஆனந்தமடைபவர்கள் ஆண்கள். பெண்களும் அடிமைச்சின்னமான உடல் அலங்காரத்தில் தங்களையும் அறியாது மோகம் கொண்டிருக்கிறுர்கள். வெறும் உடல் அலங்காரத்தை விடுத்து, கல்வியறிவும் வாழ்க்கைக்கேற்ற தொழிலறிவும் பெற்றவர்களாக மாறவேண்டும்.

தங்களைத் தாங்களே அடிமைப்படுத்தும் நிலைமாறவேண்டும், பெண்கள் விடுதலை வெறும் வெளித்தோற்றமாக இருத்தல் கூடாது; சமூக பொருளாதாரச் சீரமைப்பின் பங்குதாரர்களாகத் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும்.

**ச. ராஜனி**
சங்கானை மேற்கு.

## அனைவரும் பெண்கள்

விண்வெளி ஆராய்ச்சிக்கென அனுப்பப்படும் விண்வெளிக்கப்பலில் அனைவரும் பெண்களாகவே இனிமேல் இருப்பார்கள் என்று ரஷ்ய விண்வெளி ஆராய்ச்சிக்குழு தலைவரான ஜெனரல் விலாடிமிர் சாட்டலோங் தெரிவித்துள்ளார். ஆண்களைப்போலவே ராக்கெட்டில் இருந்தவாறே ஆராய்ச்சி செய்வதில் பெண்களும் திறமை சாலிகளே என்கிறுர் இவர்.

## முகத்தில் பருக்கள் நீங்க

கரட் ஜூஸ் அல்லது முட்டைக் கோவா ஜூஸை முகத்தில் தடவினுல் தழும்பு ளெல்லாம் நீங்கி முகம் மென்மையாக தோன்றும். தலையில் பொடுகு இருந்தால் முகத்தில் பருக்கள் வருவதுண்டு. அதனுல் தலையை சுத்தமாக வைத்திருத்தல் நல்லது.

பருக்கள் உள்ளவர்கள் காரமான உணவுப்பண்டங்களையும் இனிப்பானவற்றையும் அதிகம் உட்கொள்ளக் கூடாது. பச்சைக் காய்கறிகளையும் கீரைவகைகளையும் அதிகம் உணவில் சேர்ப்பது நல்லது.

வயிற்றுக்கோளாறு ஏதும் இருப்பின் அதை உடன் போக்க வழி செய்யவேண்டும். இல்லையேல் அதுவே பருக்கள் வர ஏதுவாகும். தினமும் காலையில் எலுமிச்சம்பழ ஜூஸ் சாப்பிட்டால் வயிற்றை சுத்தம் செய்வதோடு பருக்களையும் போக்க உதவும்.

## மேனி பளபளக்க

மேனி பளபளப்பாக இருக்க நாட்டு நெல்லிக் காயை உலர்த்தி இடித்து தூள்செய்து வைத்துக் கொள்ளவும், அதோடு பச்சைப்பயிறு மாவையும் சேர்த்து ஒரு போத்தலில் வைத்துக்கொண்டு தினசரி குளிக்கும் போதுசோப்புப் போடாமல் இந்த பவுடரை தேய்த்து குளித்து வந்தால் தோலில் சுருக்கங்கள் குறையும். உடல் பளபளப்பாக மாறும். தலைமுடியும் கருமையாக மாறும்.

## சிகரட்டினுல் பெண்கள் பாதிப்பு

சிகரெட் பிடிப்பவர்களின் மனைவிகள் எந்த அளவு பாதிப்புக்கு ஆளாகிறுர்கள்? விஞ்ஞானிகள் ஆராய்ந்து சிகரட் பிடிக்கும் பழக்கம் உள்ள ஒருவரின் மனைவி, சிகரெட் பிடிக்கும் பழக்கமில்லாத ஒருவரின் மனைவியைவிட நான்கு வருடங்கள் முன்னதாகவே இறந்துவிடுகிறுள் என்றுகண்டு பிடித்திருக்கிறுர்கள். குடும்பத் தலைவர் புகைப்பதால் வீடே புகைக்கிறது.

## பெற்றேரின் கவனத்திற்கு

சில பெண்கள் முப்பது வயதை தாண்டித் திருமணம் செய்து கர்ப்பமாறுர்கள். இவர்களுக்கு பிரசவம் சிரமத்தைக்கொடுக்கிறது. இதனுல் முப்பது வயது வரை கல்யாணம் செய்து கொள்ளாமல் இருக்காமல் அதற்கு முன்னதாகவே திருமணம் செய்து கொள்வது நல்லது. பெற்றேர் இந்த விஷயத்தில் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும். முப்பது வயதற்குமேல் கர்ப்பமான பெண்கள் விஷயத்தில் சிலருக்கு சிசேறியன் முறையில் சத்திர சிகிச்சையை செய்து குழந்தையை எடுக்கும் நெருக்கடியான நிலைமைஏற்படுகிறது.

## உலகில்முதலாவது பெண் டாக்டர்

'எலிசபெத் ப்ளாக் வெல்' இவர் யார்தெரியுமா? உலகின் முதல் பெண் டாக்டர். 1849-ம் ஆண்டு மருத்துவம் படித்து பட்டம்பெற்ற இவர் சொந்த நாட்டில் வேலை தர யாரும் விரும்பாததால் பிரான்ஸ் நாட்டிற்கு சென்று அங்கு ஆண் டாக்டர்களுக்கு உதவியாகஇந்தப் பெண் டாக்டர் வேலை பார்த்தார். எட்டு வருடங்கள் வலிமையுடன் பெண் டாக்டர் வேண்டாம் என்று போராடியவர்களையும் எதிர்த்து வென்றுர். பின் அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் 1857ம் ஆண்டு ஒரு மருத்துவ மனையை உருவாக்கி தன் பணியைத் துவங்கினுர். எவ்வளவு பிரச்னைகள் அத்தனையும் சந்தித்து இவர் திட உறுதியுடன் போராடியதால் தான் பெண் டாக்டர்கள் இன்று உலகெங்கும் காணப்படுகின்றுர்கள்.

## வீட்டுக் குறிப்புகள்

### வெங்காயம்

தினமும் பச்சை வெங்காயத்தை உணவுடன் சாப்பிட்டு வருவது மிகவும் நல்லது. இதனுல் தூக்கம் வராமல் விழித்துக்கொண்டே இருப்பவர்கள் படுத்த உடனேயே உறங்கி விடலாம். அத்துடன் கொழுப்புச் சத்துக்களையும் இந்த பச்சை வெங்காயம் நீக்கி விடும்.

ஃ ஃ ஃ

வெங்காயம் மற்றும்பூண்டுச் சாறுகளுக்கு புற்றுநோயையும் குணப்படுத்தும் அபாரசக்தி இருப்பதாக ஜப்பான் விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறுர்கள்.

### தயிர்

புளிப்பான தயிரில் நோய்க் கிருமிகள் வளருவதில்லை. பாலைத் தயிராக்கும்போது புளிக்க வைக்கிறேம். இதனுல் தயிரில் நோய்க்கிருமிகள்இருப்பதில்லை. தயிர் புளிப்பதால் விட்டமின் பி சத்து அதிகமாகிறது. தயிர் உடம்புக்கு நல்லது.

### முட்டை

வீட்டில் குளிர் சாதனப் பெட்டி இல்லாதவர்கள் முட்டையை கெடாமல் பாதுகாக்க, ஒரு சுலபமான வழி இது முட்டையின் ஓட்டின் மீது ஆமணக் கெண்ணெயை தடவி விட்டு வையுங்கள் கெடாமல் இருக்கும்.

### முருங்கை பிஞ்சு

முருங்கை பிஞ்சு குரல் இனிமையை வளப்படுத்தும்.

### வாழைப்பழம்

வாழைப்பழம் சாப்பிடுவது எல்லோருக்கும் நன்மை செய்யும். என்றுலும் சளித் தொந்தரவு உள்ளவர்கள் ஆஸ்துமா தொந்தரவு உள்ளவர்கள். பச்சைப் பழங்களைச் சாப்பிடக் கூடாது. தொந்தரவு கொடுக்கும். வாழைப்பழத்தில் உலோகச் சத்துக்கள் விட்டமின் சத்துக்கள் நிறைய இருக்கின்றன. குழந்தைகளுக்கு வாழைப் பழம் கொடுக்கலாம். மூளைக்கும் ஊட்டமளிக்கும்.

## மரமும் மனிதனும்

ஒரு அரசன் தன்பரிவாரங்களுடன் வேட்டையாடி விட்டு களைப்பு நீங்க ஒரு மரத்தின் கீழ் வந்து அமர்ந்தான் அப்பொழுது அவன் மீது ஒருகல் வந்து விழுந்தது. உடனே சேவகர்கள் நாலாபக்கங்களிலும் விரைந்து தேடினர். அங்கே நின்ற ஒரு கிழவியை இழுத்துக்கொண்டு வந்து நிறுத்தினர். அவளிடம் அரசன் நீயா என் மீது கல் எறிந்தாய் என்று கேட்டான். அவள் நடுங்கிக்கொண்டே ஆம் அரசே! என்மகன் மூன்று நாட்களாகப் பட்டினி; அதனுல் இந்த மரத்தின் மேல் பழங்கள் இருப்பதைக் கண்டு கல் எறிந்தேன்; மன்னிக்கவும் என்றுள். உடனே அரசன் நான்கு சேவகர்களை பிடித்து அவள் வீட்டில் உணவுப் பண்டங்களை கொடுத்து விட்டு வரச்சொன்னுன். அதைக்கண்ட சேவகர்கள் கல் எறிந்தவளுக்கு இதுவா தண்டனை? என்று வியந்தனர்.

**க. தில்லைநாதன்**
திருநெல்வேலி

## நீங்களும் பாடலாம்

ஆழிக்குமரன் ஆனந்தன்செய்தான்-சாதனை
அம்மா இறந்தாள் அடைந்தேன்-வேதனை
தவணை முடிவில் நடப்பது-சோதனை
ஆசிரியர் கற்பிப்பார் பல-போதனை

யாழ்ப்பாணத்தில் கற்பகத்தரு-பனை
மக்களுக்கு அவசியம் தேவை ஒரு-மனை
தேனுடன் குழைத்துத்தின்னும் மா-தினை
மலைகளின் இடுக்கினுல் நீர் பாய்வது-சுனை

வேடன் அதிகமாக உண்ணுவது - ஊன்
சிலரின் தலையில் வசிப்பது-பேன்
குரல் இனிமைக்கு குடிப்பது-தேன்
காட்டில் வாழ்வதில் கவர்ச்சியானது-மான்

**எஸ். சண்முகதாசன்**
சாவகச்சேரி

# மாணவர் மன்றம்

## அமைந்துள்ள இடங்கள்

ஐக்கிய நாட்டு தலைமைக் காரியாலயம்:-
லேக்சக்செஸ் நியுயோர்க்
ஐ. நாவின் கல்வி விஞ்ஞான கலாச்சார ஸ்தாபனம்
பாரிஸ் நகரில்
உலக சுகாதார ஸ்தாபனம்
—ஜெனிவா
உலக உணவு ஸ்தாபனம்
—மணிலா
உலக விவசாய ஸ்தாபனம்
—மணிலா
ஐ.நா.ஸ்தாபன உலக வங்கி
வாஷிங்டன்
சர்வதேச தொழில் ஸ்தாபனம் ஜெனிவா
சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஜெனிவா
சர்வதேச நீதிமன்றம்
தஹேக்

**கந்தையா முகுந்தன்**
சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி

## சில விஞ்ஞானிகளும் கண்டுபிடிப்புகளும்

இரத்தச் சுற்றேட்டம்
-வில்லியம் ஹார்வி
பரிணுமக்கோட்பாடு
-டார்வின்
மின் அலைக் கொள்கை-
பிராங்லிங்
இருதய மாற்றுச் சிகிச்சை-
கிறிஸ்ரியன் பேர்னுட்
சினிமா- லும்மியர்
நுணுக்குக்காட்டி-
ஜேன்சன்
ப்ரகூட்- கனேரிங்
பிறப்புரிமை கோட்பாடு-
லைசன்கோ
சூரியமையக் கொள்கை-
கோட்பனிக்கஸ்
அல்பா' பீற்றுக்கோட்பாடு-
யூக்காவா

**நளினி சண்முகநாதன்**
யாழ். வேம்படி மகளிர் கல்லூரி

## தெரிந்துகொள்ளுங்கள்

திபெத்தில் குடும்பத்துக்கொரு துறவி யிருப்பர்.

வாய்க்கால் கூடிய நகரம் வெனிஸ்

பக்கிங்காம் அரண்மனையில் 1000 அறைகள் உண்டு.

சென் பீற்றேஸ் தேவாலயத்தில் 7500 மக்கள் இருக்கலாம்.

ரிறினிடாட் தீவினுள் பெரும்பான்மையினர் இந்துக்கள்.

தெரு விளக்கேற்றிய முதல நவீன நகரம் பாரீஸ்.

(9-ம் பக்கம் பார்க்க)

## கணக்கில் புலி

மார்டின் ஜே. ஸ்பால்டிவ் (1810 - 1872) என்ற இவர் லெபனுன் நாட்டுக்காரர் கென்ருகியில் உள்ள சென்ட் மேரி கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் போதே கணிதப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். இத்தனைக்கும் இள நிலைப்பட்டத்திற்கே இன்னும்இரண்டு ஆண்டுகள் இருந்தன.

கணக்கில் புலி என்பதால் 14 வயதில்பேராசிரியரான இவர், பிற்காலத்தில் ஆசிரியராக வாழ்க்கையை தொடர்ந்தாரா? அதுதான் இல்லை. பால்டிமோரில் ஆர்ச் பிஷப்பாக ஆனுர்!

# வாதரோகத்தை குணப்படுத்தும் வல்லமை முருங்கை இலைக்கு உண்டு

(சென்ற வாரத் தொடர்ச்சி)

முருங்கைகளில் காட்டு முருங்கை, நாட்டுமுருங்கை, கொடிமுருங்கை, உலாந்தா முருங்கை, குறும்முருங்கை, எனப்பல இனவகையாக இருக்கின்றன. இவற்றில் அதிக பலனையும், சதைப்பிடிப்புள்ள காய்களையும், இலகுவில் வளரக் கூடிய வல்லமையும் உடையது உலாந்தா முருங்கையாகும்.

முருங்கையும், நாட்டுக்கேற்பவும், சூழலுக்கேற்பவும், அதன் வளர்ச்சி செழித்து ஓங்குவதைக் காணலாம். சில ஊரிலுள்ள முருங்கைக்காய் சுவைகூடியதாகவும்; நல்ல சதைப்பிடிப்புள்ளதாகவும் இருக்லக்காணலாம். உதாரணமாக, மண்டதீவு, வேலணை, சாவகச்சேரி முருங்கைக்காய்கள் சிறப்புடையதாக இலங்கைமக்கள் கருதிவாங்குகின்றார்கள், யாழ்ப்பாணத்து முருங்கை இந்தியாவில் பல இடங்களில் பயிரிட்டிருப்பதைக் காணலாம். அங்கு யாழ்ப்பாண முருங்கை இனத்துக்குத் தனியான கிராக்கியுண்டு. முருங்கை மரத்தைத் தடியிலிருந்தும், விதையிலிருந்தும் உற்பத்தி செய்யலாம். ஆனால்தடியில்இருந்துஉற்பத்தி செய்வதே இலகுவானதும், விரைவில் பலன் தரக்கூடியதுமாகும். முருங்கை மரத்திலும் ஒட்டுப்பயிர் செய்வது சுலபமானதும், இலகுவானதுமாகும். மா, பலா ஒட்டுவது போல தண்டுகள், குருத்துக்களை நல்ல இனங்களை ஒட்டி நல்ல இனமுருங்கையை உண்டாக்கலாம். முருங்கை எங்கும் செழித்து வளரும். ஆனால் மணல் பாங்கான நிலங்கள் சுண்ணாம்பு சத்துள்ள நிலங்களில் செழித்துவளரும்.

முருங்கைமரத்தின் முழுப் பொருளுமே உபயோகமானதாகும். வேர், பட்டை, இலை, காய், பூ, பிசின், இவைகள் தனித்தனி விசேட மருந்து குணங்களைக் கொண்டிருப்பதைக் காணலாம்.

மேல்நாட்டு வைத்திய விஞ்ஞானிகளால் கூட இன்று வரை பூரணமாக் குணப்படுத்தமுடியாத, மாலைக்கண் (அந்திக்காமலை) மதுமேகம், (டயபிரிஸ்) நீரழிவு, எலும்பு முறிவு முதலிய ரோகங்களை முருங்கையின் உதவியால் பூரணமாக மாற்றக்கூடிய வகையில் சிறந்தவர்கள் எங்கள் சித்த வைத்தியர்கள்.

முருங்கையில் இலை ஒரு சிறந்த தேசிய இரையாகும். இதில்பலவகையான உணவுகளை ஆக்கலாம். கறி, குழம்பு, சுண்டல், பால்சொதி, புளியாணம், பிட்டு, கூழ், முதலிய பலவகையில் உணவுகளுக்கும் முருங்கையிலை பயன்படுத்தப்படுகின்றது.

சுதேசவைத்தியர்களால் கொடுக்கப்படுகின்ற எல்லா வகையான கடினரோகங்களுக்கும் உப்பை முருங்கையிலையுடன் வறுத்தே அந்த உப்பைச் சேர்ந்துக் கொள்ளச் சொல்வார்கள். சித்தவைத்தியத்தில் முருங்கை இலையோ, முருங்கைப் பிஞ்சோ சேர்த்துக் கொள்ளாத நோய்கள் இல்லையென்று தான் சொல்லலாம்; பெரும்பாலும், முருங்கையின் பிரயோசனம் பத்தியத்துக்குரியதாக இருக்கின்றதைக் காணக்கிடக்கின்றது. முருங்கை இலைக்கு வாதரோகத்தைக் குணப்படுத்தக் கூடிய வல்லபம் உண்டென்பதை சிறந்த வைத்தியர்கள் அறிவார்கள். வாதரோகமுள்ளவர்கள் தினமும் ஒரு பிடி முருங்கையிலையை தேங்காய் சேர்க்காது, பக்குவப்படுத்தி உண்டு வந்தால் வாதத்தன்மை குறையும். மற்றவர்கள் ஒரு கிழமையில் ஒருநாளாவது முருங்கையிலையில் உணவு செய்து உண்பது உடலுக்கு நன்மையாகும். முருங்கையிலை மலச்சிக்கலை நீக்குவதுடன், உடலிலுள்ள விஷசம்பந்தமான நோயையும் நீக்கக் கூடிய வல்லமை கொண்டது. அத்துடன் பித்தரோகத்தையும் கட்டுப்படுத்தும் தன்மையுள்ளது. பித்தக்காமாலை, பித்தச்சோகை, கல்லீரல் கோளாறு, பித்தப்பைக் கோளாறு, முதலிய பித்தத்துடன் சம்பந்தப்பட ரோகங்களை நீக்கவல்ல சக்திமுருங்கையிலைக்குண்டுஎன்றால் அதிசயப்பட மாட்டாதார்யாருண்டு.

குழந்தைகளுக்கு பால்மாந்தம், செமியாக்குணம், பால் சத்தி ஏற்பட்டால் முருங்கை இலைக்காம்பு, சுக்கு, மிளகு, ஓமம் இவைகளுடன் சிறுக வறுத்து தண்ணீர்விட்டுக் கசாயமாக்கி 1-2, தேக்கரண்டி பருக்கி விட்டால், குணமாவதுடன் வயிற்றுப் பூச்சி கிருமி தோஷங்களும் மாறிவிடும்.

பெரியவர்களும், செமியாக் குணம் வயிற்றுப் பொருமல், வயிறூதல், வாய்வுக்கோளாறு மயக்கம், தாகம் ஆகியவற்றுக்கு முருங்கை இலைச் சாற்றை உப்புப் போட்டுக் கலக்கி குடிக்கக் கொடுத்தால் எந்தவித செமியாத் தோஷங்களையும், செமிக்கச் செய்து குணமாக்கக் கூடியது. வயிற்றில் சதா வாய்வால் கஸ்டப்படுபவர்கள் வாதநோயால் துன்புறுபவர்கள், வயிற்றில் பூச்சிக குழப்பம் உள்ளவர்கள் மார்புவலி இடுப்புவலியால் கஸ்டப்படுபவர்கள் சாதாரணமாக முருங்கையிலையை உணவுடன் கலந்து சாப்பிட்டால் அவர்களுக்கு பூரண சுகம் காணக் கூடியதாக இருக்கும்.

(முற்றும்)

சித்த வைத்திய கலாநிதி
**க. சிற்றம்பலம்**

## தெரிந்து

(8ம் பக்கத் தொடர்ச்சி)

நான்கு நதிகள் நனைக்கும் நகரம் மான்செஸ்ரர்.

ரஷ்யா மேற்குக் கிழக்காக 7000 மைல் நீளம் ஆனது.

பாலஸ்தீன நாட்டுக்கு எட்டுப் பழைய பெயர்கள் உண்டு.

பிரித்தானிய பிரதமரின் டவுணிங் வீதி 150 யார் நீளமானது.

**ஏ. எஸ். வதனேஜன்**
அச்சுவேலி மகாவித்தியாலயம்

## வண்டமிழ்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கினும் தேனடைகள் குலை குலையாய்காய்த்துத்தொங்கும் கனி வகைகள் வெண்ணிற நுரைதெறிக்க கீழே நோக்கிப் பாயும் அருவிகள் வேடர் கூடும் மன்ற வெளிகளிலே பெருங் கற்பார்கள் நெருங்கி விளங்குகின்றன. அவற்றின் மேல் முசு என்னும் ஒரு வகைக் குரங்குகள் குதித்து விளையாடுகின்றன. மலைப் பாறைகளிலும் மரத்துச்சிகளிலும் அமைந்த தீந்தேன் அடைகளை வேடுவர் பற்றித் தேனைக் கவர்ந்து கீழே எறிந்துள்ளனர். அத்தேன் இருல்களை மான்குட்டிகள் தம் காற்குழம்புகளால் மிதித்து உழக்குகின்றன. திணைக்குதிரை அரிந்த புனத்தே பன்றிகள்நிலத்தைக் கொம்பால் உழுகின்றன. அப்பன்றிகள் கிளறிய பள்ளங்களுள் ஆண்குரங்குகள் முதிர்ந்த வாழைக்காய்களைக் கனிவிக்க விரும்பி உள்ளேயிட்டு மண்ணை மூடிவைக்கின்றன. மலை வாழ்களிறுகள் வாழைத்தோட்டத்தில் வாளைத் தண்டுகளையுண்டு களிக்கின்றன. அவ்வாறு உண்ணும் களிறு பிளிறும் பிடியின் நீர்வேட்கை போக்க கூவலில் ஊறும் சிறிய நீரையேனும் அளித்துக் காக்கும் இப்படி மலையும் மலைச்சாரலும் இயற்கை இன்பம் ஊட்டி நிற்கும். புலி புள்ளி பொருந்திய முகத்தினையுடைய யானையைப் பாய்ந்து அதன் குருதியைத் தன் வயிறாரக் குடித்து பின் அவ்வாயை வேங்கை அடிமரத்தில் துடைத்து விட்டு அப்பாற்செல்லும். இவ்வாறுகுறிஞ்சி நிலக்காட்சியின் இயற்கை நோக்கு அமையும் என்க.

(தொடரும்)

## தமிழ் இலக்கியத்தில்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ளல்ல; நோக்கமுமல்ல வென்ற அன்று அடைந்த மகிழ்ச்சியும் பெரியதாக மகன் போரிட்டு மடிந்த மகிழ்ச்சி அந்த முதியவருக்கிருந்தது. ஆனந்தக் கண்ணீர் உகுத்து உவகையடைந்தாள்.

மீன் உண் கொக்கின்
தூவி அன்ன
வால்நரைக் கூந்தல்
முதியோள் சிறுவன்
களிறு எறித்து பட்டனன்
என்னும் உவகை
ஈன்ற ஞான்றினும்
பெரிதே கண்ணீர்
நோன்கழை துயல்வரும்
வெதிரத்து
வான்பெயத் தூங்கிய
சிதரினும் பலவே.

மற்றொரு வீரத்தாயின் வீரத்தை நோக்குவோம். தன் மைந்தன் பகைவர்க்குப் புறங்காட்டி ஓடினான் என்று கேள்வியுற்றாள், கொதித்தெழுந்தாள். கொடிய வாளைக்கையில் எடுத்தாள். "என் மகன் போர்க்களத்தில் புறங்காட்டி ஓடினான் என்பது உண்மையானால் அப்பேடிக்குப் பாலூட்டிய மார்பை இவ்வாளால் அறுப்பேன்" என்று வஞ்சினம் கூறிப் போர்க்களம் புகுந்தாள். போர்க்களத்தில் பிணக்குவியலிடையே நடந்து சென்றாள். தன்மகன் இறந்து கிடப்பதைக் கண்டாள். புறமுதுகில் எதுவித வடுவும் காணப்படவில்லை. அவனது முகத்திலும், மார்பிலும் அடியுண்டு சிதைந்து கிடந்த அவ்வுடலைக் கண்ட நிலையில் அவனைப் பெற்றபோது அடைந்த இன்பத்திலும் பெரியதோர் இன்பம் கண்டாள்.

# வைத்தியகலாநிதி பதிலளிக்கின்றார்

கேள்வி: வயது 50. இரவில் நித்திரை குறைவு. அடிக்கடி நித்திரை கலைகிறது. நள்ளிரவு 12 மணிக்கு பின் நித்திரை வரும். அதிகாலை 4 மணிக்கு எழுந்து விடுகிறேன் பகலிலும் தூக்கம் இல்லை சில நாட்களில் (Piriton) மாத்திரை ஒன்றை பாவிப்பேன் அன்று நித்திரை வரும். இந்த மாத்திரையை தினமும் பாவிக்கலாமா? நித்திரைக்கு வழி கூறுவீர்களா?

வி. குமார்
கிளிநொச்சி.

ப: நித்திரைகுறைவிற்குஉளவியல் காரணமும் ஒன்றாக இருக்கலாம். உங்களுக்கு ஏதாவது கவலைகள் மனப் பிரச்சனைகள் உள்ளதா? இல்லாவிடில் தினமும் உடல் அப்பியாசம் படுக்க முன் சூடான பால் அருந்துதல், நித்திரை வரும்வரை புத்தகங்கள் வாசிப்பது போன்றனவற்றை முயற்சிக்கலாம். Piriton மாத்திரை பாவித்தல், நித்திரைக்கு பாவிக்கும் மற்ற மாத்திரைகள் போன்று பாதிப்பு ஏற்படுத்தாவிடினும் உங்கள் வயதை கருத்திற் கொண்டு இயற்கையான நித்திரையே சிறப்பானது,

0 0

கேள்வி: நான் ஒரு தொழிலாளி வயது 40. சிலவாரங்களாக கைகால் சோர்வாக உள்ளது. உற்சாகமில்லை; சிறிது வேலை செய்தாலும், உடல்முழுவதும் வியர்த்து விடுகிறது. அதன் பின் களைப்பாக இருக்கிறது. உடல் பெலயீனமாக இருக்கிறது. உடல், பலமடைய ஆலோசனை கூறுவீர்களா?

வி. கணபதி
நெல்லியடி.

ப: நீங்கள் உடனடியாகஒரு மருத்துவரை அணுகி வைத்திய பரிசோதனை செய்வது அவசியம், நீங்கள் கூறும் அறிகுறிகள் போஷாக்கு குறைபாடு (முக்கியமாக குருதிச் சோகை அல்லது ஓமோன்களின் குறைபாட்டால் (சலரோகம்) ஏற்படலாம். எனவே காலதாமமின்றி வைத்திய சிகிச்சை எடுப்பது நல்லது. குடல் புழுவிற்கு மருந்து எடுப்பது இரும்புச்சத்து விட்டமின் குளிசைகள் உபயோகிப்பது சிறிதுநன்மையைத்தரும்.

0 0

கேள்வி; எனக்கு வயது 40. உடலில் சில இடங்களில் தேமல் படர்கிறது இதற்கு முன் இப்படி வந்ததில்லை. என் குடும்பத்தில் வேறு எவருக்கும் தேமல் இல்லை. இது தொற்றுவியாதியா? இதனை மாற்ற வழியென்ன?

க. குமாரசாமி
வவனியா.

ப: சாதாரணமாக தேமல் என்று குறிப்பிடப்படுவது ஒரு பங்கசு வகையைச் சேர்ந்த நுண்ணுயிரினால் தோற்றுவிக்கப்படுவதாகும் இது ஒருவரில் இருந்து மற்றவர்கட்டு தொடுகையின் மூலமாகவோ, நோய் உள்ளவரின் உடை அணிந்தாலோ தொற்றும் வாய்ப்பு உண்டு. இது பொதுவாக தோலில் நிறமாற்றத்தை மட்டுமே ஏற்படுத்துகின்றது. படரும் தன்மையை கொண்டிருப்பதுடன் பாதிக்கப்பட்ட பகுதியில் சொறியும் ஏற்படும். இது பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதில்லை ஆனால் தேமல்என சில நோயாளிகளினால் அலட்சியப்படுத்தப்பட்டவை பின் தொழுநோயாக அடையாளம் காணப்பட்டுள்ளன, தொழுநோயினை எவ்வளவு விரைவில் கண்டுபிடிக்கிறோமோ அவ்வளவிற்கு அதனை மாற்றுதல் சுலபம். அத்துடன் Psorasis போன்ற நோய்களும் தேமல் போன்றேஆரம்பிக்கும். எனவே தகுதி வாய்ந்த வைத்திய அதிகாரியிடம் நேரடியாக ஆலோசனை பெறவும் தேமல் ஆயின் Whit field Ointment தொடர்ச்சியாக சில வாரங்களுக்கு பூசுவதன் மூலம் குணமடையலாம்.

0 0

கேள்வி: வயது 18. மாணவன் தலை முன் பக்கத்தில் நரைக்கிறது. ஏதாவது விட்டமின் சத்திகுறைவால் இது ஏற்படுகிறதா? நரையைப் போக்க வழி கூறுவீர்களா?

'சிவம்'
சாவகச்சேரி.

நரையினைப் போக்குவதற்கு என்று மருந்துகள் இல்லை. சிலருக்கு K. விட்டமின் குளிசைகள், இரும்புச்சத்து குளிசைகள் நன்மை அளித்துள்ளது. நரையை மறைக்க (Dye) உபயோகிப்பதே ஓர் சிறந்த வழியாகும். இதனை விட சில விலையுயர்ந்த வெளிநாட்டு மருந்துகள் தற்போது விற்பனையாகின்றன. (தலைமயிருக்கு பூசும்) இவை எவ்வளவு தூரம் நன்மை பயக்கும் என நிச்சயமாக கூறமுடியாது.

கேள்வி: எனது தலைமயிர் 1989 ஆண்டு செப்டெம்பர் மாதம் புளு வெட்டுப் போல வெட்டி மயிர் உதிர்ந்து விட்டது. பின் முழுமையாக வழித்து விட்டேன். பின் ஆயுள் வேத வைத்தியரிடம் காட்டினேன். அவர் எண்ணை தந்தார். அவற்றை பாவித்து வந்தேன். 3, 4 மாதங்களின் பின் நன்றாக முளைத்து இருந்தது. 90ம் ஆண்டு பெப்ரவரி மாதம் மீண்டும் மயிர் உதிர தொடங்கியது. அத்துடன் முகத்தில் ஒரு பக்க மீசை மயிர் உதிர்ந்தன பின் தேகத்தில் உள்ள மயிர் கால் கையில் உள்ள மயிர்களும் உதிர்ந்து விட்டன. நெஞ்சில் உள்ள மயிர் உதிர்ந்து நடுவே கொஞ்சம் உள்ளது. எனது நோய்க்கும் தங்கள் ஆலோசனையை தந்து உதவுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

பொ. பஞ்சநாதன்
வட்டக்கச்சி.

பதில்; நீங்கள்கட்டாயம்ஓர் சரும நோயியல் விஷேட பயிற்சி பெற்ற வைத்தியரின் ஆலோசனை பெறுவது நலம். (யாழ். போதனா வைத்திய சாலையில்) உடனடியாக அவ்வாறு செய்ய முடியாது இருப்பின் "Grisio Fulvin 500 mg இனை இரவில் பாலுடன் எடுக்கவும். தொடர்ச்சியாக குறைந்தது 6 கிழமைகட்கு எடுக்கவேண்டும். இது விலை கூடிய குளிசையாகும் எனவே யாழ். போதனா வைத்தியசாலையில் ஆலோசனை பெறுதலே மிகச் சிறந்ததாகும்.

## நம்பிக்கை

இலையுதிர் காலத்து
மரத்தைப் பார்த்து
ஏங்கி நிற்கும்
ஏழையிவன்...
இரவும் பகலும்
மாறிவரும் இயல்பை
எண்ணி மனம்
சாந்தி அடைகின்றான்!
விதியெனும் பெயரால்
எதையோ இழந்துவிட்ட
அவன்—
ஏங்குகின்றான்
வாழ்வுக்காக
ஏனென்றால்; அவன்
வாழ்வும் ஓர்நாள்
துளிர்விடும் என்ற
நம்பிக்கையில்!

கருணா

# பனை வளம் பேணுவோம்!

● எஸ். ஜி. கணேசவேல் ●

பாய் இழைப்போம்! கடகங்கள் பெட்டி செய்வோம்!
பனாட்டுண்போம்! பனங்கட்டி கிழங்கும் கொள்வோம்;
வாய் இனிக்க பதநீரும் கள்ளும் கொணர்வோம்
வயிருறப் பிட்டவிப்போம்! ஒடியல் மாக்கூழ்
ஒய்வெடுத்து சேர்ந்திருந்து ஊதிக் குடிப்போம்
உள்ளபயன் அத்தனையும் நுகர்வோம் எனினும்
பேய்க்காற்று புயல்மழைக்கு வணங்காப் பனையை
பேணிவளர்க் காதுநாம் வெட்டித் சாய்த்தோம்

ஷெல்லடியை சூடுகளைத் தாங்கி எங்கள்
செல்வங்களை இன்னுயிரைக் காத்த பனையில்
வெல்லங்களும் பன்னங்களும் செய்தல் விட்டு
வீழ்த்துவதும் தறிப்பதுவும் நன்றோ சொல்வீர்?
கொல்லைகளில் தரவைகளில் அந்தக் காலம்
கோடிபனை வடலிகளின் கூடல் கண்டோம்
இல்லையின்று பனைவடலி! இனியும் தொடர்ந்தால்
எதிர்காலச் சந்ததிக்குப் பனையே இல்லை!

பனைஉணவால் பலம் பெற்ற பாட்டன் பூட்டன்
பரம்பரையில் வந்தவர் நாம் எங்கள் மண்ணின்
கனிவளம்போல் திகழ்ந்தபனங் காட்டை அழித்துக்
கல்வீடு கட்டுவதில் பெருமை கண்டோம்
இனப்பழமை குலப்பெருமை பேசிப் பேசி
எதிர்மறையாய் வாழ்வதிலே தமிழன் வல்லான்
பனங்கொட்டைத் தமிழனெனப் பட்டம் பெற்றும்
பிற்காலம் பனைக்கிங்கு இடமே யில்லை

களையாலும் வண்டாலும் வரட்சி யாலும்
கால்நடையால் நோய்நொடியால் அழியாப் பனைகள்
வளையாது வான் நோக்கும் வைரப் பனைகள்
வாலிபத்தை மக்களுக்காய் வழங்கி மண்ணில்
சளையாது போராடும் தீரர் போன்று
சர்வமுமே எமக்களிக்கும் தருக்கள் அன்றோ
சுளையாக சிலநூறு ரூபா நத்தி
தூயபனைச் செல்வத்தைத் தொலைந்தே விட்டோம்

கடல்வளமும் பனைவளமும் கல்வி வளமும்
கமம்செய்யும் விவசாயி கரத்தின் பலமும்
திடங்கொண்ட தொழிலாளர் தோளின் உரமும்
திகழ்கின்ற இன்னபிற நலங்கள் சேர்ந்தே
வடகிழக்கு மாகாண மக்கள் வாழ்வை
வளப்படுத்தும் மங்காத சக்தி கண்டீர்!
வெளிநாட்டு உதவிகளும் அகதிக் காசும்
விடுதலைக்கு நிரந்தரமாய்த் துணைக்கு வாரா.

பலகோடி பனைவளத்தால் ஈழ நாடு
பார்மீது வளம்பெற்ற நாடாச் சென்று
உலகோடி வியக்கின்ற வண்ணம் இங்கே
உள்ளபனை வளமனைத்தும் நுகர வேண்டும்
சிலநூறு ரூபாக்காய் பனையை வெட்டி
சிதைத்தியற்கைச் சூழலையும் கெடுத்தல் வேண்டாம்
நலம்நூறு நூறுண்டு தொடர வேண்டின்
நாம் எமது பனைவளத்தைப் பேணிக் காப்போம்!

# நோய் நீக்கக் கலைஞர்

(7ம் பக்கத் தொடர்ச்சி)

பூர்வமாகவும் வெளிப்படுத்தினவா அல்லது வாய்ப்பாடாகக் கொண்டனவாஎன்பதைத் தெளிவுபடுத்துவது சங்கடமாகவுள்ளது. ஆனால் ''வண்ணப் பூச்சுகள்'' கோயில் காட்சியுடன் இயல்பு நிலையை அடையத் தலைப்பட்டுவிட்டது. ''கானல்'' என்ற நாடகம் மிக நல்ல பண்புகள், உத்திகள் சிலவற்றைக்கொண்டிருந்தது. சில பாத்திரங்கள் பேச முடியாத சில உபதேசங்களை அவற்றின் வாயில் புகுத்தியும் மிக மோசமான நம்பிக்கையீனத்தை இறுதியில் வெளிப்படுத்தி நின்ற நாடக எழுத்துருவை மன்னிக்கமுடியாது. ''கானல்'' என்ற பெயரை வைத்து விட்டதற்காக வாழ்வை ''நாலடியார்'' பாணியில் நம்பிக்கை அற்றதாக்க வேண்டுமா? ''ஆடப்பொற் சுண்ணம்'' நல்லமுறையில் தனது கதையைச் சொல்லத் தவறிவிட்டது. நடிகர்களிலும் வாய்க்கரிசி போடுபவர்களாக வந்தவர்கள் தவிர. ஏனைய பெரும்பாலோர் உணர்ந்து நடிக்கத் தவறிவிட்டனர்.

ஐந்து நாடகங்களையும் சேர்த்து நோக்குமிடத்து நூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் நடிகர்களாகப் பங்கு கொண்டனர். இவர்கள் ஒவ்வொருவரதும் நடிப்பு, பாத்திரப் பொருத்தம், பேச்சு என்பவற்றைத் தனித்தனியே கூறுவது என்பது இங்கு இயலாத காரியம். இவர்களுள் நெஞ்சில் நிறைந்த பாத்திரங்கள் பலவற்றை உருவாக்கியபல ஆண்களும் பெண்களும் உள்ளார்கள். அவர்கள் தங்கள் பாத்திரங்களைப் பேச்சாலும் செயலாலும், அசைவாலும், சைகையாலும் பலகாலத்துக்கென எமது மனதில் பதித்துவிட்டுப் போய்விட்டார்கள். அவர்கள் தாங்கிவிட்ட சோகங்களையும் ''வீரிட்ட'' அழுகைகளையும் துன்ப துயரங்களையும், ஆடம்பரங்களையும், பாட்டுக்களையும் நிதானங்களையும் எமது மனதில் பதித்துவிட்டுப் போய்விட்டார்கள். நாம் சில காலமேனும் அவற்றைச் சுமந்தாகத்தான் வேண்டும். ஆனால் சிறந்த நடிகராகத் தெரியப்பட்ட ''இழத்தை'' வாழ்நாள் வரை சுமந்தாகத்தான் வேண்டும். அது நாம் செய்த புண்ணியம் .உண்மையில் புண்ணியம் தான். அவர் எம் நெஞ்சோடு கலந்துவிட்டார்.

ஆயினும், 'பிணம் தின்னும்' சாத்திரங்கள்'' இல் வந்த பெரும்பாலான நடிகர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்காமல் இருக்கவும் முடியவில்லை. நீங்கள் தெரிவு செய்த கதை பாஞ்சாலி சபதம்; அதுவும் பாரதி பாடிய பாஞ்சாலி சபதம் பாரதியின் கவிதைகளை; அப்படியே எடுத்துக் கையாண்டிருக்கிறீர்கள். உங்கள் துணிவையும், வீரத்தையும் பாராட்டத்தான் வேண்டும். உங்களுக்கு ஒத்திகைக்கு கிடைக்கும் ஐந்தாறு நாட்களுக்குள் அக்கவிதைகளை மனனம் செய்து விட்டீர்கள். கெட்டிக்காரர்கள். ஆனால் தமிழைப் பேசும் முறைமை என்று ஒன்று இருக்கிறதே; உங்களில் சிலருக்கு ஆங்கில பேச்சு முறை உங்களை அறியாது தொக்கு நிற்கிறது.

கவிதையைப் பேசுவதென்றால் மிகஅற்புதமான தமிழ்த் தொனியில் பேச வேண்டுமே; பாரதியின் கவிதை என்றால், அதுவும் பாஞ்சாலி சபதத்தில் கவிதைகள் என்றால், பல்வேறு உணர்ச்சிகளையும் பாவங்களையும் அள்ளிக் குளைத்து வைத்திருக்கின்றனவே, அவற்றைப் பேச முடியாது உங்களில் பெருப்பாலும் எல்லோரும் திணறிய போது, அல்லது பேசக்கூடாதவாறு பேசியபோது, உங்களுக்காக எங்கள் உள்ளங்கள் உருகின, முன்னர் பல நடிகர்கள் இத்தகைய உரையாடல்களை அற்புதமான உணர்வு, பாவங்களோடு பேசி நடித்த இனிய காட்சிகளைப் பலகாலத்தின் பின் மீளவும் சிந்தித்து மகிழ்ந்து கொள்ள ஒருவாய்ப்பினை மட்டுமே உங்களால் தரமுடிந்தது. பாஞ்சாலி சபதத்தில் பாஞ்சாலியாவது சிறந்திருக்க வேண்டும். பாவம் பாஞ்சாலி குருவிகளின் தலையில் பனங்காயை வைத்தால், குருவிகளுக்காகத்தானே நாம் அனுதாபப்பட முடியும். மேடை அசைவில் கதை நகர்வில், நல்ல சில நுட்பங்களைக் கையாள நீங்கள் தவறவில்லை. பல இடங்களில் உணர்வுக்கும் பொருந்தாத வகையில் பாடல் மெட்டு அமைந்திருந்த போதிலும், நீங்கள் நிறையப் பாடல்களை நன்றாகவே பாடினீர்கள். காலதிகாலமாக புராண இதிகாச வழிவந்து, மக்கள் மனங்களில் பதிந்துவிட்ட பாத்திரங்களை மேடையில் நிறுத்துவதாயின், மிகுந்த அனுபவமுள்ள நடிகர்களுக்கே முப்பது நாற்பது நாள் ஒத்திகை தேவைப்படும். நீங்கள் அதற்கென்ன செய்வீர்கள். ஆயினும், இத்தகையதொரு நாடகத்தை நடிக்க முனைந்த உங்களைத் திரிகரண சுத்தியோடு பாராட்டுகிறேம்.

எல்லா நாடகங்களிலுமே குறைந்தது ஒரு நடிகையேனும் மேடையில் கூச்சப்பட்டுச் சிரிக்காது விடத்தவறவில்லை. அது ஒரு கணப்பொழுது நிகழ்ந்ததாயினும் பார்வையாளர் கண்களில் பட்டுவிட்டதே. நல்ல நாடகங்களைக் கண்ணூறு கழிக்க அவ்வாறு செய்தீர்களா? நிச்சயமாக இராது. குற்றம் உங்களுடையதல்ல; கூச்சம் போகுமுன் போட்டித்தினம் வந்துவிட்டது. உங்கள் குற்றமல்லத்தான்.

குறைகள் கூறவேண்டுமென்பதற்காக இவற்றைக் கூறவில்லை. நல்லதரமான நிலையை நோக்கி அனைத்து நாடகங்களுமே நின்றதனால், தரங்குறைந்த நாடகமெனில் மிக அற்பமாகத் தெரிந்திருக்கக் கூடிய இக்குறைகள், இங்கு பூதாகரமாகத் தெரிந்து விட்டன. பரந்த வெள்ளைச் சுவரில் ஒரு சிறு மறுவேனும் இல்லாது இருப்பது நல்லதுதானே.

இறுதியாக, மேடையில் அவைக்காற்றப்படும் நாடகம் என்பது, அதனைத் தயாரித்தளித்த நெறியாளனது படைப்பு என்றே கூறுவார்கள். அந்த மேடை அளிக்கையில் பயன்படுத்தப்பட்ட நடிப்பு, உரையாடல், அசைவு, சைகை, பாத்திரப் படைப்பு, மேடைப்பயன்பாடு, காட்சியமைப்பு, ஒப்பனை, உடை, இசை, ஒளி அனைத்தும் நெறியாளனது விருப்புக்கும், வியாக்கியானத்துக்கும் அமையவே அளிக்கை செய்யப்படும் என்றால், போட்டியில் முதலாவதாக வந்த நாடகம் இருக்க, இரண்டாவதாக வந்த நாடகத்தைத் தயாரித்த நெறியாளர் எவ்வாறு சிறந்த நெறியாளராகத் தெரியப்பட்டார் என்ற வினாவுக்கான விடை எனக்குக் கிடைக்கவில்லை.

## சீதனம்

சீதனப் புயலே
நீ வீசும்போது
உதிர்ந்து போகும்
மலர்கள் எத்தனை!
கள்ளமே அறியாத
இளம் பெண்களின்
வாழ்வில் விளையாடும்
கொடுமைக்குணம்
அழியும்நாள் தான்
அரிவையர் வாழ்வில்
விடிவுதரும் நாள்.

--ஜெ. சிவயோகமலர்

# தவில் கலையில்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வளர்ந்த கலைஞனுக்குரிய சிறப்போடு பதிலளித்தார், பழனி மலை.

### அறிவுரை

''இத்துறையில் ஈடுபட்டுள்ள தங்களைப் போன்ற கலைஞர்களுக்கும் இளம்கலைஞர்களுக்கும் தாங்கள் வழங்கும் அறிவுரை யாது?''

''தவில் துறையில் ஆர்வமுள்ளவர் எவரும் முன்னுக்கு வரலாம் என்பது எனது நம்பிக்கை.

''நடை, அட்சரம், சொல்லுக்கட்டு, மோரா, தாளங்கள் போன்றவற்றை நன்றாகத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். புதிய புதிய நாதங்களைக் கண்டு பிடிக்கவேண்டும். கற்பனு சக்தி புத்திக்கூர்மை, கைவிரல் அசைவு போன்றவையும் தவில் கலைஞர்களுக்கு அவசியம் தேவை'' என்று அறிவுரை வழங்கினுர்..

### நீண்ட நேர கச்சேரி

,'நீங்கள் ஒருகச்சேரிநடத்துவதாக இருந்தால் எத்தனை மணித்தியாலம் நடத்துவீர்கள்?'' என்று கேட்டபோது, ''நிகழ்ச்சி நடத்துபவர்களைப் பொறுத்து கச்சேரி நேரம் இருக்கும் அநேகமாக எம்மைப்பொறுத்த வரையில் 4 அல்லது 5 மணித்தியாலங்கள் ஒரு கச்சேரி நடத்துகிறேம்.

''வல்லிபுரக் கோயிலில் காரைக்குறிச்சி அருணுசலம் பிள்ளையுடன் நடத்திய கச்சேரியொன்றின் போது தொடர்ந்து ஏழு மணித்தியாலயங்கள் கச்சேரி நடத்தினேன்'' என்றுர் பழனி.

### லட்சியம்

உங்கள் லட்சியமென்ன என்ற கேள்வி எழுந்தபோது ''தவில் துறையில் இன்னும் பலசாதனைகளைச் செய்வதுடன் பல கலைஞர்களை உருவாக்க வேண்டும். அத்துடன் இத்துறை தொடர்பாக பல்கலைக்கழக மட்டத்தில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு தவில்கலை அபிவிருத்தி செய்வதற்கு உழைக்க வேண்டும்.

''கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, சுவிஸ், டென்மார்க், ஜெர்மனி, நோர்வே போன்ற நாடுகளிலும் தவில் கச்சேரி நடத்த வருமாறு அழைப்புகள் வந்த வண்ணமுள்ளன. அங்கு சென்றும் எமது கலைத்துவத்தைக்காட்ட வேண்டும்''.

### கைதடியில் பாராட்டுவிழா

இத்தகைய சிறப்பும் பெருமையும் வாய்ந்த உலகக்கலைஞர் பழனிமலைக்கு கைதடி இணுங்கித்தோட்டம் கந்தசுவாமி கோயிலில் இம்மாதம் 23-ம் திகதி சனிக்கிழமை பாராட்டு விழாவொன்று நடத்தப்படவுள்ளது.

ஒரு சிறந்த கலைஞனை இலங்கை அரசு கௌரவிக்காவிட்டாலும் தமிழர்களாக பிறந்த நாம் கௌரவித்தே ஆகவேண்டும். இது எமது வரலாற்றுக் கடமையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

# தூக்கம்

இரவில் படுக்கப்போகிறேம். சிலருக்கு தூக்கம் உடனே வருகிறது. இன்னும் சிலருக்கு தூக்கம் வருவதில்லை. தூக்கம் வராவிட்டால் என்ன செய்வது. கசகசாவை கொஞ்சம் அம்மியில் அரைத்து ஒரு தம்ளர் பாலில் கலந்து சாப்பிடுங்கள். தூக்கம்வரும். தூக்கம் வரவேண்டும் என்பதற்காக தூக்க மாத்திரைகளை சாப்பிடாதீர்கள்.

# ஈழத்துப் புதுக்கவிதை

(4ம் பக்சுத் தொடர்ச்சி)

என்கின்ற கவிதை அடிகள் புதிய உவமைகளைக் கையாண்டு வெளிவந்தன.

1940 களில் புதுக் கவிதைகள் ஈழத்தில் வெளிவந்த வேகம் பின்னர் சற்று சற்றுகத் தேயத்தொடங்கியது. இக்காலம் புதுக் கவிதைக்கு ஈழத்தில் ''இருண்ட காலம்'' என்றே வர்ணிக்கலாம்.

ஆரம்ப காலத்தில் வெளிவந்த புதுக் கவிதையின் பண்புகளை செ. யோகராசா என்பவர் பின்வருமாறு தொகுத்துக் கூறியுள்ளார்.

★ ஆரம்ப காலம் புதுக் கவிதைகள் ''வசன கவிதைகள்'' என அழைக்கப்பட்டமை.

★ ஆயினும் வசனநடைக்குரிய இயல்புகளிலிருந்து விடுபடாதிருந்தமை.

★ தென்னிந்தியாவில் பிரக்ஞை பூர்வமான முயற்சியாக தோன்றியது போன்று ஈழத்தில் அமையாமை.

★ படிமம், குறியீடுகள் முதலியன அருகியும், உவம உருவகத் தொடர்கள் அதிகமாயுங் காணப்பட்டன.

(தொடரும்)

## "நாம் கல்வியுடன் நல்ல பண்புகளை வளர்க்க வேண்டும்"

(மட்டுவில்)

"கல்விகற்று கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் ஆசிரிய தொழிலுக்கு வரும் சமுதாயம் ஒரு பெருமைக்குரிய சமுதாயம். நாம் கல்வியுடன் நல்ல பண்புகளை வளர்த்துக் கொள்ளவேண்டும்."

இவ்வாறு பயிலுநர்கள் ஆசிரியர்களின் திசைகாட்டல் உறுத்தல் பயிற்சியின் முதலாம்கட்ட பூர்த்தியின்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இராசசுந்தரலிங்கம் கூறினார்.

பயிலுநர் ஆசிரியர் திரு. சு. நடராஜா தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் தென்மராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு எஸ். தனஞ்சயன், உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. எஸ். தியாகராஜா, கல்வி அதிகாரி ஜுனுப் இஜனு உட்பட பலர் கலந்து கொண்டனர். சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. சுந்தரலிங்கம் தொடர்ந்து கூறியதாவது:

"நாம் கல்வி கற்பது எமது ஒளிமயமான எதிர்காலவாழ்வுக்காக நல்ல நெறிகளுக்கு வழிகாட்டுவதற்காக. இந்த மட்டில் கல்வியின்பயன் முடிந்துவிடுவதல்ல. அதையும் உயர்ந்த நேர்மை, பண்பு, லட்சியம்: அன்பு, சகிப்புத்தன்மை என்பனவற்றையும் கற்றவர்கள் கைக்கொள்ள வேண்டும்.

கற்ற பின்னரும் கண்ணிருந்தும் குருடர்களாக பல கல்விமான்கள் இருக்கின்றனர். நாம் கல்வியுடன் நல்ல பண்புகளையும் வளர்த்துக்கொள்ளவேண்டும். நாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற நிறைந்த குணசிரயம் ஆசிரியர்களுக்கு இருக்கவேண்டும்.

பயிலுனர் ஆசிரியர்களின் நாட்டிய நாடகக் கலை கதம்ப நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. செல்வி வ. கமலேஸ்வரி நன்றி கூறினர். (82)

## நூல் அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

சிரித்திரன் சித்திரக்கொத்து நூல் அறிமுக விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கரவெட்டி திருஇருதயக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தலைவர் திரு. த. சிதம்பரப்பிள்ளை தலைமையில் இவ்விழா இடம் பெறும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் பிரதம விருந்தினராக இவ்விழாவில் கலந்து கொள்வார். (153)

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ், மாவட்ட இந்து இளைஞர் பேரவை சுயதொழில் வேலைவாய்ப்புகளும், பனம்பொருள் உற்பத்தி ஊக்குவிப்பும் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்றை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை நல்லை ஆதீனத்தில் நடாத்தவுள்ளது.

இக்கலந்துரையாடலில் இந்து இளைஞர் மன்ற இளைஞர், யுவதிகள் தவறது சமூகமளிக்குமாறும், இதன் மூலம் சுயதொழில் வேலை வாய்ப்புக்கான திட்டங்கள் உருவாக்கப்படும் என்றும் யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவர் திரு. வே. கெ. தனபாலன் அறிவித்துள்ளார். (54)

## சமய அறிவுப் போட்டி

(உடுவில்)

இணுவில் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு இணுவில் இந்து சமய வளர்ச்சிச் சங்கம் இளம் தொண்டர் சபை ஆகிய இணைந்து சமய அறிவுப் போட்டி ஒன்றை நடாத்த உள்ளனர்.

இம்மாதம் 17ம் திகதி நடைபெற உள்ள இப்போட்டிக்கான விண்ணப்பங்களை இன்று இணுவில் கந்தசுவாமிகோவில் இந்து சமய வளர்ச்சிச் சங்கம் அல்லது இளம் தொண்டர் சபை சைவப்பணிமனையில் ஒப்படைக்குமாறு திரு. சி. சிவபாதசுந்தரம் கேட்டுள்ளார். (109)

## கைத்தொழில் மயமாக்கும் திட்டமும் அமைதியும்

புதிய கைத்தொழில் மயமாக்கும் திட்டத்திற்கான அத்திவாரத்தை இடுவதற்கு குறைந்தது ஒரு வருடத்திற்கும், இரண்டு வருடத்திற்கும் இடைப்பட்ட கால அமைதி நாட்டுக்குத் தேவை. ஆதலினால் தான் பிரேமதாஸா அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்தத்தை தவிர்க்க எல்லாவகையிலும் விரும்புகிறது. ஆயினும் எதிர்கட்சிகள் கொடுக்கும் நெருக்கடியைப் பொறுத்து பிரேமதாஸா அமைதியை நீடிக்க விரும்புவதற்கான ஆயுட்காலம் தங்கியிருக்கும் என்று கூறப்படுகிறது.

ஜே. ஆர். அரசாங்கத்தின் வெளியுறவுத் கொள்கையிலிருந்து பிரேமதாஸா அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கையில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

ஜனாதிபதி பிரேமதாஸா ஏற்படுத்திய வெளியுறவுக் கொள்கை மாற்றங்களுள் ஒன்று கிழக்காசிய, தென் கிழக்காசிய நாடுகளுடன் அதிக நல்லுறவுகளை வளர்த்துக் கொள்ளுதலாம். சீனா (கொங்கொங் உட்பட), யப்பான், தென்கொரியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகள் இந்த வரிசையில் அடங்கும். புதிய கைத்தொழில் மயமாக்கப்பட்ட நாடு தென்கொரியா இத்தகைய நாடுகளை ஆங்கிலத்தில் NIC என்று அழைப்பார்கள். (Newly Industrialized Country) கொங்கொங்கும் இந்த வரிசையை சார்ந்ததே.

எனவே தென்கொரியா, கொங்கொங்பாணியில் NIC இலங்கையையும்வரிசையில் ஒன்ருக்கும்பொருளாதாரக் கொள்கையை அரசாங்கம் வகுத்துள்ளது. இதற்குரிய பிரதம கொள்கை வகுப்பாளர் பிரட்மன் வீரக்கோன் ஆகும். இத்தகைய பொருளாதாரக் கொள்கைக்கு ஏற்ப இலங்கையின் கல்வித்திட்டத்திலும் மாற்றம்கொண்டு வரப்பட உள்ளது. அதற்குரிய பொறுப்பு லலித் அத்துலத்முதலியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

- அவதானி

## "வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஒரே விதமான பாலர் கல்விமுறை கொண்டுவரப்படவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் ஒரேவிதமான பாலர் கல்விமுறை கொண்டுவரப்படவேண்டும் என்று யாழ். பல்கலைக்கழக கல்வித்துறை விரிவுரையாளர் திருமதி குணேஷ் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

அறவழிப் போராட்டக் குழுவினால் ஆரம்பிக்கப்படவிருக்கும் 'பாலர் கல்வி மூலவள நிலையம்' தொடர்பான கருத்தரங்கில்கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினர்.

குழுவின் தலைவர் திரு. கே. கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"கொஞ்ச காலத்திற்குமுன் பாலர் கல்வித் திட்டம் எங்களுக்குத் தேவையில்லை என்ற ஒரு நிலை இருந்தது. ஆனல் இன்றைய காலகட்டத்தில் பாலர் கல்வி முக்கியமாக கருதப்படுகிறது.

பாலர் கல்வி தொடர்பாக பல்வேறுவிதமான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும். இதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பாலர் கல்வி மூலவள நிலையம் முயற்சியெடுக்கவேண்டும்.

பாலர் கல்விக்கு தேவையான நூல்கள், தொலைக் காட்சிச் சேவை, பாலர்கள் பற்றிய வரலாறு, ஒலிப்பதிவு நாடாக்கள் போன்றவை இந்த மூலவள நிலையத்தில் இடம்பெறுவதுடன் பாலர் மாதிரிப் பாடசாலையொன்றும் இதில் அமைக்கப்பட்டிருக்கவேண்டும்.

பாலர் பாடசாலைகளில் பயில்கின்ற பாலர்களுக்கென தனித்துவமான சீருடைகளும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

இன்றைய சமுதாயத்தைப் பொறுத்தவரையில் பாலர் கல்வி என்பது மிகமுக்கியமான விடயம். இது அவதானமாக அணுகப்பட வேண்டும். இதற்கு ஒரு மூலவள நிலையம் கட்டாயம் தேவை.

நூல் நிலையம், ஆய்வு நிலையம், மேற்பார்வைக்குழு, பெற்ரோர் குழு போன்றவை இந்த மூலவள நிலையத்திற்கு அவசியமானவையாகும்".

த. அப்புத்துரை, ச. நடேசபிள்ளை, திருமதி ராஜி சண்முகநாதன், க. ஜீவகதாஸ் ஆகியோரும் இக் கருத்தரங்கில் உரையாற்றினர்கள்.

## பண்ணிசையில் முதலாமிடம்



கொழும்பு விவேகானந்தா மகாவித்தியாலயத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய அகில இலங்கை இந்து சமயப்போட்டிகளில் மத்திய பிரிவு பண்ணிசையில் செல்வி ஜெயபாரதி நவரத்தினம் முதலாவதுஇடத்தைப் பெற்று தங்கப்பதக்கம் பெற்றுள்ளார்.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர கல்லூரி மாணவியான இவர் கரவை சைவநெறிக் கழக உறுப்பினரும், வதிரி பூவற்கரை விநாயகர் ஆலயம் அல்வாய்சாமணந்தறைப்பிள்ளையார் ஆலயபண்ணிசை இசை உறுப்பினரும், வதிரி வடக்கு மெ. மி. பாடசாலையின் பழைய மாணவியுமாவார்.

இவர் கர்நாடக இசை, பண்ணிசை, வயலின், மிருதங்கம், நடனம் ஆகிய கலைகளையும் தமதுகல்வியோடு பயின்று வருகின்றார். கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி ஆசிரியரும், வானொலிப் பாடகருமாகிய சி. நவரத்தினம், சங்கீத பூஷணம் திருமதி தங்கராணி கனகசபை, மிருதங்க வித்துவான் இராமநாதன், திருமதி மங்களம் ஸ்ரீதரன் ஆசிரியை ஆகியோர் இவரின் ஆசானாவார்கள்,

இவர் வடஇலங்கைச் சங்கீத சபை நடாத்தும் பரீட்சையில் நான்காம் தரம் வரை கர்நாடக இசை வயலின் ஆகியவற்றுள் விசேட சித்தி பெற்றுள்ளார்.

கலை சம்பந்தமான பல போட்டிகளிலும் பேச்சுப் போட்டிகளிலும் உடற்பயிற்சிப் போட்டிகளிலும் கலந்து முதலாவது இடத்தைப் பெற்றுள்ள இவர் கரவெட்டிமேற்கு நவரத்தினம், சுசீலாதேவி ஆகியோரின் கனிஷ்ட புதல்வியாவர்.

## நிர்வாகத்தில் நிகழ்பவை

* நிர்வாக நடைமுறைச்சிக்கலின் காரணமாகவே வெங்காயம், பருப்பு இறக்குமதியில் தடங்கல் ஏற்பட்டதாக அரச அதிகாரிகள் தங்கள் நிலைமையை நியாயப்படுத்தினர். ஒருவர் கப்பல் இல்லை என்றும் மற்றவர் தாங்கள் விலையை நிர்ணயிப்பவர்களேயன்றி இறக்குமதிக்கும் தங்களுக்கும் தொடர்பு இல்லை என்றும் இப்படி பலவிதமானவற்றை கூறி திருப்தி கொண்டனர். பொதுமக்களுக்கு இக் காரணங்கள் அவசியமற்றவை. மக்கள் பிரதிநிதிகளை தங்களுக்கு வேண்டியவற்றை செயற்படுத்துவதற்காகவே தேர்ந்தெடுத்துள்ளனர். காரணங்கள் கூறுவதற்காயின் அதனை வாக்காளரும் கூறலாம். இருப்புக்களை சரிபார்த்து உரிய நேரத்தில் பொருட்களை சம்பந்தப்பட்டவர்கள் இறக்குமதி செய்தல் வேண்டும். வெங்காய உற்பத்திக்கு வேண்டிய திட்டங்களை தொடர்புள்ள திணைக்களம் உருவாக்கி அதனை ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் நடைமுறைப்படுத்தி கிராமிய வங்கிகள் மூலம் கடன் வசதிகளை ஏற்படுத்தி கொள்வனவு முதலியவற்றை செய்தால் என்ன? அரசும் சிலசமயங்களில் பொறுப்பற்ற முறையில் வெங்காயத்தினை இறக்குமதி செய்வதால் கமக்காரர்கள் அவ்வுற்பத்தியை கைவிடுகிருர்கள் என்பதும் உண்மைதான். கைத்தறி நிலைமை பற்றி ஆராயப்பட்டது போல் இதற்கும் ஓர் சரியான திட்டம் வேண்டும்.

* கடமை உணர்வு பொறுப்பு முதலியனவற்றை கவனத்தில் கொண்டு செயற்படும் அரச பணியாளர்களுக்கு பதவி உயர்வு விஷேட ஊக்குவிப்புகள் வழங்க பொது நிர்வாக உள்துறை அமைச்சர் நடவடிக்கை எடுக்கப்போவதாக செய்தி வெளியாகி உள்ளது. பொது மக்களுக்கு உதவும் வகையில் அமைச்சர் தயாரிக்கும் திட்டம வரவேற்கக்கூடிய தொன்ருகும். ஆனல் அரச பணியாளர்கள் நிலைமையை எந்த அளவு கோல் மூலம் தீர்மானிக்கப் போகின்ருர்கள் என்பதுதான் முக்கியம். விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டதாக இவை அமைந்திருத்தல் வேண்டும். அல்லாவிட்டால் மீண்டும் பழைய நிலைதான் ஏற்படும்.

* திணைக்கள சில அதிகாரிகள் தங்கள் கடமைகளை மனவுறுதியுடனும் விசுவாசத்துடனும் செய்கின்றனர். சிலர் ஏனோதானோ என்ற நடைமுறை. இதனல் சரியான முறையில் செயற்படும் அதிகாரிகளுக்கு மிகவும் கஷ்டமான நிலை. இதனை சீராக்க வேண்டின் பல கண்டிப்பான நடவடிக்கைகள் எடுக்கப்படுவது நியாயமே. சிலர் தீர்மானங்களை எடுக்கும் பொழுது தங்கள் சொந்த எண்ணங்களையும் நோக்கங்களையும் முன்னிலைப்படுத்துகின்ருர்கள். இதனல் எடுக்கும் தீர்மானம உறுதியற்றதாகவும் சர்ச்சைக்குரியதாகவும் அமைகின்றது, இதனல் நிலலையை சமாளித்தல் என்ற நிலைக்கு ஒவ்வொரு காரியமும் தள்ளப்பட்டு நிர்வாக நடைமுறை சலனத்துக்குள்ளாகிறது. இந்த அதிகாரி ஏன் இப்படி நடந்து கொள்கிருர் என்பது அவருக்கும் தெரியும். அவரோடு சம்பந்தப்பட்டவர்களுக்கும் தெரியும். ஒரு அதிகாரி ஒரு விடயத்தைப்பற்றி யாராவது தெளிவு கோரினல் அதற்கான சகல விடயங்களையும் நன்ருக ஆராய்ந்த பின்னரே முடிவை வழங்குதல் வேண்டும். தெரியாத விடயத்தில் ஆலோசனை பெறுவது குறைவாக கணிக்கப்படமாட்டாது. ஆனல் முதலில் ஒரு முடிவையும் பின்னர் அதற்கு மாருன முடிவையும் அதிகாரி ஒருவர் வழங்குவாரானல் அந்த அதிகாரி எப்படி பொறுப்பானவராகவும் நம்பிக்கைக்கு பாத்திரமானவராகவும் திகழ முடியும். இதனை அரச அதிகாரிகள் சிந்திக்கவேண்டும். அத்துடன் செயற்படவும் வேண்டும்.

- உற்றுநோக்கி

## கொழும்புச்சந்தையில் 'போமலின்' கலந்த மீன் கண்டுபிடிப்பு!

(கொழும்பு)

'போமலின்' மருந்து கலந்த மீன்கள் கொழும்பு மத்தியசந்தைச்கு வந்துசேர்ந்துள்ளமை கொழும்பு மாநகரசபை அதிகாரிகளினல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மீன் லொறிகளிலிருந்து எடுக்கப்பட்ட மீன்களை ஆய்வுகூடப் பரிசோதனைக்கு உட்படுத்தியபோது. போமலின் கலந்துள்ளமை ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது என மாநகரசபை வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆபத்துக்குரிய போமலின் விநியோகத்தில் சுகாதார சேவைப்பகுதி இயக்குநர் தீவிர கட்டுப்பாடு விதிக்கவேண்டும் என்று கொழும்பு மாநகரசுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தல் செய்திருந்தும், ஏதோ ஒரு வழியாக போமலின் தனியார் கைகளுக்குச் சென்றுவிடுகிறதென்றும். மாநகரசபை வைத்திய அதிகாரி கவலை தெரிவித்துள்ளார். (அ)

# பொதுச் செயலாளராக மகாசிவம் தெரிவு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளராக மீண்டும் திரு. த. மகாசிவம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு நேற்று யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் பரபரப்பின் மத்தியில் நடைபெற்றது. சில தெரிவுகள் ஏகமனதாகவும் சில தெரிவுகள் போட்டியின் பின்பும் நடைபெற்றன.

205 மேலதிக வாக்குகளால் திரு. த. மகாசிவம் மீண்டும் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். தலைவராக மட்டக்களப்பைச் சேர்ந்த திரு. வி. த. குமாரசாமியும், நிர்வாகச் செயலாளராக மீண்டும் திரு. த. அருணகிரிராசாவும், சிரேஷ்ட துணைச் செயலாளராக மீண்டும் திரு. த. பஞ்சலிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர்.

நிதிச் செயலாளராக திரு. ஜே. ஜேசுதாசன் (யாழ்ப்பாணம்), பத்திரிகைச் செயலாளராக திரு. எஸ். கே. சதாசிவம் (வட்டுக்கோட்டை), கல்வி, கலை, கலாசாரச் செயலாளராக திரு. எஸ். பாலசிங்கம் (மூதூர்) பிரசாரச் செயலாளராக திரு. சி. சரவணபவானந்தன் (முல்லைத்தீவு) உபதலைவர்களாக திரு. நா. சோதிநாதன் (கிளிநொச்சி), திரு. ம. செ. தேவதாசன் (திருகோணமலை), திரு. ம. செ. மாணிக்கவாசகர் (நல்லூர்), திரு. மு. கேசவன் (பெல்மதுளை) ஆகியோர் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டனர்.

துணைச்செயலாளர்களாக திரு. த. பஞ்சலிங்கம் (யாழ்ப்பாணம்), திரு. அ. அருமைநாயகம் (வேலணை), திரு. ஏ. சி. பி. கிருபாகரன் (கம்பகா) ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். துணை நிதிச் செயலாளர்களாக திரு. செ. மனோகரன், திரு. இ. மதியழகன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (153)

---

## யாழ். வந்த

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னேற்பாட்டு பாதுகாப்பு நடவடிக்கையாகவே இராணுவத்தினர் மதவாச்சியில் இறக்கப்பட்டனர் என மதவாச்சி பாதுகாப்பு உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சகல இராணுவத்தினரும் மதவாச்சியில் இறங்கும் வண்ணம் அநுராதபுர புகையிரத நிலையத்திலே ஒலிபெருக்கி மூலம் முன் அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

---

## பாதுகாப்பு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

எட்டு லாண்ட் ரோவர்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளது

இதைவிட, இலங்கை இராணுவ ஆயுதங்களின் உதிரிப்பாகங்கள் கொள்வனவுக்கு 45 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கை பாதுகாப்பு படையில் சிறுபான்மை இனத்தவர்களுக்கு இடமளிக்கும் விதத்தில் 7000 தமிழர்கள் பொலிஸ் படையில் சேர்க்கப்படவுள்ளனர் என்றும் இதில் 100 தோட்டப்பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்கள் இடம் பெறவுள்ளனர் என்றும் பாதுகாப்பு அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (அ)

---

## புலிகளின்

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

தமிழர்களின் அடிப்படை உரிமைகளுக்காக குரல் கொடுக்க விடுதலைப் புலிகள் உரித்து உடையவர்கள். தமிழ் மக்கள் தமது பகுதிகளைத் தாமே ஆளுவதற்கு உரிமையுடையவர்கள் என்றார்.

அரசியற் சட்டத்துக்கு இணங்க மாகாணசபைகளுக்கு முழுமையான அதிகாரப் பரவலாக்கம் இடம்பெறாவிட்டால். முதலமைச்சரும் ஏனைய மாகாணசபை அமைச்சர்களும் முறையாக பரிபாலனம் செய்ய முடியாத காரியம் என்று அவர் மேலும் கூறியுள்ளார். (அ)

---

## 16 இலங்கையர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகளும் பொலிஸாரும் விசாரணை மேற்கொண்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யூகோஸ்லாவியா செல்லுவதற்கு விஸா தேவை இல்லை, என்ற காரணத்தினால் இலங்கையர்கள் இந்த நாட்டின் ஊடாக இத்தாலிக்கு கடத்தபடுவதாக அறியப்படுகிறது.

யூயோக்கோஸ்லாவிய அதிகாரிகள் இதே போன்ற பல மோசடிகள் நிகழ்ந்து வருவதை சுட்டிக்காட்டியதையடுத்துகட்டுநாயக்கா விமான நிலைய அதிகாரிகள் இத்தகைய கடத்தல் பயணங்கள் குறித்து கண்காணிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

---

# வாகனக் கொள்ளையர் கைது

(கொழும்பு)

தென்பகுதியில் வாகனங்களைக் கடத்தி வடக்கு கிழக்கு பகுதியில் விற்பனைசெய்த கொள்ளைக் கோஷ்டி ஒன்றை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இக்கொள்ளை கோஷ்டியினர் கடந்தபல மாதங்களாக சுமார் 100 பல்வேறுவித வாகனங்களை தென்பகுதியில் கடத்தி வடக்கே குறிப்பாக வவனியா பகுதியிலும், கிழக்கில் திருமலையிலும் விற்பனை செய்துள்ளனர்

இவர்கள் அனைவரும் தற்போது தடுப்புக்காவலில் விசாரணைக்குட் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (சி)

# இன்று

(வேலணை[

வேலணை கல்விக்கோட்ட அலுவலகத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் கலைப்பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்கள் ஒன்றிணைந்து நடாத்தும் கலை விழா இன்றுபிற்பகல் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

---

உலக கிண்ண

# இன்றைய உதைபந்தாட்டம்

(இத்தாலி)

உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில், இன்று ஞாயிறு நடைபெறும் ஆட்டங்களின் விபரம்:-

''ஏ'' பிரிவு: ஐக்கிய அமெரிக்கா, எதிர் செக்கோஸ்லாவியா.

''ஸி'' பிரிவு: பிரேஸில் எதிர் சுவீடன். ''டி'' பிரிவு மே. ஜெர்மனி எதிர் யூக்கோஸ்லாவியா. (வி)

---

## உலக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'டி' பிரிவு; ஐக்கிய அரபு இராட்சியம் எதிர் கொலம்பியா போட்டியில் கொலம்பியா 2-0 கோல்களால் வெற்றிபெற்றது. (சி)

---

## புலிகள்-படையினர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யும் இவ்வாறான சூழ்நிலைகளை தவிர்ப்பது தொடர்பாகவுமே பேச்சுக்கள் நடைபெற்றிருக்கலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா தற்போது சுமுக நிலைக்கு திரும்பியுள்ளதாகவும் வழமையான காரியங்கள் நடப்பதாகவும் தெரிவிக்கபடுகிறது. (சி)

---

## மீண்டும் கலவரம்

(1ம் பக்கத் தொடர்ச்சி

இந்தச் சமாதான முயற்சிகளுக்கு தடையாக இருப்பவர்கள் சாதிக்கப்போவது என்ன?

இவர்கள் எமது எதிர்காலச் சந்ததியினரின் மனதைக் குழப்பி நாட்டை அழிக்க முனைகிறார்கள்.

மீண்டும் ஒரு கலவரம் ஏற்பட்டு எம்மிடையே உருவாகி வரும் புரிந்துணர்வு இல்லாமல் போவதற்கு யார் முயன்றாலும் அது முடியாத காரியமாகும்'' என்றார். (அ)

---

## தமிழ் தேசிய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

இம்மாநாட்டில், இந்தியப் படையினர் இலங்கைத் தமிழர்மீது நடத்திய பல தாக்குதல் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பான பல புகைப் படங்கள் காட்சிக்கு வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. இது இந்திய இராணுவத்திற்கு இழுக்குத் தேடும் என்பதாலே இறுதி நேரத்தில் இம்மாநாட்டிற்கு தடைவிதிக்கப்பட்டதாக தெரியவருகிறது. (து)

---

# கச்ச தீவை இந்தியா கைப்பற்ற வேண்டும்

(சென்னை)

தமிழக மீனவர்களின் நலன்களை பேணிப் பாதுகாக்கும் பொருட்டு கச்ச தீவை மீண்டும் பாரதம் பெறுவதற்கு தேவையான அனைத்து முயற்சிகளையும் மத்திய அரசு மேற்கொள்ளவேண்டும்.''

இவ்வாறு அ. இ. அ. தி. மு. கழக இணைப் பொதுச் செயலாளர் திரு. எஸ். வி. சோமசுந்தரம்நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்–

அவர் மேலும் தெரிவித்ததாவது: இவ்விடயத்தில் தமிழிநாடு அரசு மத்திய அரசுடன் ஆலோசனை நடாத்தி தமிழக மீனவர்கள் இலங்கை கடற்பிராந்தியத்திலும், இலங்கை மீனவர்கள் பாரதக் கடற்பிரதேசத்திலும் மீன்பிடிக்க ஏற்றநடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை - இந்திய உறவுகள் பேணப்படுவதற்கு இத்தகைய முயற்சிகள் மிகவும் அவசியம் கச்சதீ சில வருடங்களிற்கு முன்னர் இலங்கை அரசிடம் கையளிக்கப்பட்டது தெரிந்ததே. (க)

---

# பஸ்சேவைமோசம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் 60வீத மானவர்கள் வங்காலை கிராமத்திலேயே அரச அலுவலர்களாக உள்ளார்கள் இவர்கள் தினமும் வங்காலையிலிருந்து தத்தம் கடமை புரியும் இடங்களுக்குச் செல்வதற்கு மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். முக்கிய ஆசிரியர்கள் அதிபர்கள் பாடசாலைகளுக்கு தினமும் பல மைல் தூரம் நடந்து செல்லக்கூடிய அவலநிலையில் உள்ளனர் கடந்த சில மாதங்களாக பஸ்சேவை சீராக இல்லை.

---

# 'தடாகம்' அறிமுக விழா

(நாவற்குழி)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சி கலை கலாசாரப் பிரிவினரால் இன்று ஞாயிறு ''தடாகம்'' அறிமுக விழா நடாத்தப்படவுள்ளது.

தென்மராட்சி மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு. ரஞ்சன் தலைமையில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி அரங்கில் நடைபெறும் இவ் அறிமுக விழாவில் விடுதலைப் புலிகளின் தென்மராட்சிப் பொறுப்பாளர் திரு. தினேஸ், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. பாப்பா, சாவகச்சேரி நகரப் பொறுப்பாளர் திரு. கோபால் ஆகியோர் சிறப்புரை வழங்கவுள்ளார்கள்.

இந்நிகழ்ச்சியில் ''அமைதி நிலைத்திடுமா அடிமைநிலை அகன்றிடுமா என்ற தலைப்பில் கவியரங்கம் நடைபெறவுள்ளது.

''குற்றவாளிக் கூண்டிலே ராஜீவும் பெருமாளும்'' என்ற [illegible]ப்பல் வழக்காடுமன்றும், [illegible]டுதலை வேள்வி, உரிமைக் [illegible]தரல், சுதந்திர தாகம் ஆகிய [illegible]டகங்களும் இடம்பெறும். (107)

---

# வடமராட்சியில் பி. பி .சி செய்தியாளர்

பி. பி சி செய்தியாளர் தி[illegible]ரு. கிறிஸ்தோபர் மொறிஸ் நேற்று வடமராட்சிக்கு விஜயம் செய்து பல பகுதிகளையும் பார்வையிட்டார்.

இதன்போது மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையின் அவலநிலையினையும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி நீதிஸ்தலம், நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மில்லரின் தாக்குதலுக்குள்ளான கட்டிடங்களையும் பார்வையிட்டதோடு புகைப்படமும் பிடித்துக் கொண்டார்.

வைத்தியசாலையின் அவலநிலையினை வைத்தியசாலை முகாமையாளர் டாக்டர் எஸ் [illegible]ரவேற்பிள்ளை தாதிகள் முகாமையாளர் திரு. ரி. பரஞ்சோதி, மகப்பேற்று டாக்டர் குழந்தைவேற்பிள்ளை ஆகி[illegible]யார் விளக்கிக் கூறினர். (51)

---

# புதிய ஈரோஸ் உறுப்பினர்

(மட்டக்களப்பு)

சுயேச்சை குழுவின் (ஈரோஸ்) மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினராக திரு. கே. சபாரெத்தினம் நியமிக்கப்படவுள்ளார்.

மேற்படி குழுவின் மட்டக்களப்பு மாவட்ட எம். பி. யாக இருந்த திரு. பொ. சுகுமார் தனிப்பட்ட காரணங்களின் நிமித்தம் தனது எம். பி. பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

இவரின் காலியான இடத்துக்கே திரு. சபாரெத்தினம் நியமனம் பெறவுள்ளார்.

---

# பற்றுக்குறை நீங்கியது

(வடமராட்சி)

யாழ். மாவட்ட சுகாதாரப் பணிப்பாளரின் உத்தரவினால் பருத்தித்துறை மந்திகை ஆதார வைத்தியசாலையின் தாதிகள் பற்றுக்குறை நீங்கியது.

மேற்படி தாதிகள் பற்றுக்குறை காரணமாக வைத்தியசாலை ஸ்தம்பிதநிலையேற்பட இருந்த வேளையில் மேற்படி பணிப்பாளர் நாயகம் மேலதிக வேலைசெய்வதற்கு அனுமதியளித்தைத் தொடர்ந்து தாதிகள் பற்றுக்குறை ஓரளவு தவிர்க்கப்பட்டதாக தாதிகள் முகாமையாளர் திரு. ரி. பரன்சோதி தெரிவித்தார்.

மேற்படி தட்டுப்பாட்டினை மந்திகை வைத்தியசாலை உயர் அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை, குழந்தை பேறு டாக்டர் எஸ். குழந்தைவேல் திருமதி ஏ. பரஞ்சோதி, திரு. ஆர் பாலகிருஷ்ணன், திரு. எஸ். நடராசா, திரு. ரி.பரஞ்சோதி ஆகியோர் கொண்ட குழு ஒன்று யாழ். மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் திரு. கனகசபை அவர்களை நேரில் கண்டதைத் தொடர்ந்து தடைசெய்யப்பட்டிருந்த மேலதிக வேலைகளை மீண்டும் தாதிகளை செய்யவதற்கு அனுமதியளிக்கும் உத்தரவினை வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

---

# உவர்நீராக மாறும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் அனேக நந்நீர்க் கிணறுகள் உவர்நீர்க் கிணறுகளாக மாறி வருகின்றன. இதைத் தடுப்பதற்கு மாகாண சபையில்நீர்ப்பாசன வீடமைப்பு அமைச்சு தக்க நடவடிக்கை எடுத்து புதிய அணுகு முறையை கையாள இருக்கிறது.

---

## ஈ. பி. ஆர். எல். எவ்.

(1ம் பக்கத் தொடர்சகி)

அரசு மேற்கொள்ளும் சகல முயற்சிகளையும் ஈ. பி. ஆர். எல். எவ். எதிர்க்குமென மாகாண அமைச்சர் திரு. பி. கிருபாகரன் தெரிவித்துள்ளார்.

இதற்கு எதிராக சட்ட நடவடிக்கைகளையும் தமது கட்சி மேற்கொள்ளுமென்றும் தெரிவித்தார்.

---

# மரண அறிவித்தல்

## செல்வி மேரி பூரணம் சொலமன்

(பெரியக்கா)

இரண்டாம் குறுக்குத்தெரு Solomon House ஐ சேர்ந்த பூரணம் சொலமன் [Retired Supervisor Telecommunication, Jaffna) காலமானார் இவர் ஞானம் சொலமன் (சின்னக்கா), தயாமணி நவரத்ணத்தின் சகோதரியும், மனோ குமாரசிங்கத்தின் பெரிய தாயாரும், குமாரசிங்கத்தின் மாமியாரும் ஆவார். அன்னாரின் அடக்க ஆராதனை இன்று ஞாயிற்றுக்கிழமை 10 - 6 - 90 பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல்நல்லடக்கத்திற்காக கொட்டடி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
தயாமணி நவரட்ணம்

Solomon House
13, Second Cross Street
Jaffna

(சி. 3968)

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு ஆனி மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.